# விவிலிய வினாடி வினா

## சரியான விடைகளை எழுதியவர்கள்

**அருட்சகோதரிகள்**

லூர்து மேரி, மேரி செசாரியா- சென்னை, ஜோஸ்பிட்டா மேரி- திருச்சி, ஸ்டெல்லா ரோஸ், ஜெயசேகரி -திண்டுக்கல், மேரி மௌரிஸ், ஜூலி எலிசபெத்- தஞ்சாவூர், பிலோமினாள், டோனெட்டல்லா அனஸ்தாசியாள், அனன்சியாத்தா, லூக்காஸ் மேரி, ஜார்லத் புஷ்பா, டோம்னா மேரி, பவுலின் மேரி - கும்பகோணம், ஜான்சி மேரி, இரஞ்சிதம் - மதுரை, புஷ்பம் - சிந்தாமணி, ரூபி மேரி - கரூர், லோரா மேரி, வித்யா மேரி, ரூபெல்லா மேரி - தூத்துக்குடி, புஷ்பாமேரி-சிவகங்கை, சலேத் மேரி-திருப்பூர்.

**பொதுநிலையினர்**

பிரான்சிஸ் பேசில், மேரி மார்கரேட், அனிருத் ஜோஸ்வா, ஆனி பீட்டர் ராஜ், லீமா தெரஸ், இமாக்குலேட் சோபியா, ஜெகரெட்சகன் ஜோசப், சந்தனம், பாத்திமா, நான்சி பியூலா, செலின் மேரி - திருச்சி; ததேயுஸ் கரோலின் - திருப்பூர், மிக்கேல்சாமி, புஷ்பக்கண்ணு - கோயம்பத்தூர், வியாகுல மேரி, ஜெயராஜ் - சென்னை, சிப்ரியன்-தெளி, மேரி - இளையரசனேந்தல், மரிய பிரகாசம், நிர்மலா செல்வம்-தர்மபுரி, ஜோஸ்பின் சகாய ராணி - கும்பகோணம்.

**குலுக்கல் முறையில் பரிசு பெறுபவர்கள்**

அருட்சகோதரி. இரஞ்சிதம் - மதுரை
திருமதி. நிர்மலா செல்வம் - தர்மபுரி

Owned and Published by THE ORDER OF SERVANTS OF MARY from Jyothi Matha Alayam. 5/301 Matha Koil Street, Rajiv Gandhi Road, Okkiampet, Chennai – 600 097 and Printed by M. RAJA REGAN at Devan Press, Old No.138/1, New No.158/1, Venkatachala Mudali Street, Royapettah, Chennai – 600 014.
Editor: Fr. R.M. UGIN WINNER OSM.








# வலிகள்

## பதிப்பாசிரியர் பக்கம்


அருட்பணி. யூஜின் வின்னர் ம.ஊ.ச

ஆகட்டும் இதழின் ஆசிரியர்களே அன்னை மரியாளின் பக்தர்களே, வலிகள் இல்லாத வாழ்க்கை என்று ஒன்று கிடையாது. நாம் என்று இந்த உலகத்தில் ஒரு மனிதனாக பிறக்கின்றோமோ அன்று முதல் வலிகளும் நம்மோடு பிறக்கின்றது. சாதரண மனிதர்களாகிய நமக்கு நம்முடைய வாழ்க்கையில் வலிகள் இருப்பதுபோல் சாதாரண மனிதப் பெண்மணியான அன்னை மரியாளின் வாழ்க்கையிலும் அதிகமாக வலிகள் இருந்தது. இந்த வலிகள் அன்னை மரியாளுக்கு கொடுக்கப்பட்டது என்பதைவிட அன்னை அந்த வலிகளை விரும்பி ஏற்றுக் கொண்டார்கள் என்பதுதான் நிதர்சனமான உண்மை. அன்னை மரியாளின் சிறுவயது வாழ்க்கை நிச்சயமாக மகிழ்ச்சி நிறைந்த வாழ்க்கையாகதான் இருந்திருக்கும். ஆனால் என்று கடவுளின் திட்டத்திற்கு ஆம் என்று பதிலுரைத்தாரோ அன்றுமுதல் அன்னை மரியாளின் வாழ்க்கை முற்றிலுமாக மாறியது. வாழ்க்கை முழுவதும் துன்பங்கள்தான். ஆண்டவர் இயேசுவைத் தன்னுடைய வயிற்றில் கருத்தாங்கியது முதல் ஆண்டவர் இயேசுவின் இறப்பு வரை வாழ்க்கை முழுவதும் துன்பங்கள், வலிகள், வேதனைகள்தான்.

திருமண வயதில் இருக்கும் ஒரு சாதாரணப் பெண்ணினால் எத்தனைத் துன்பங்களை வலிகளைத்தான் தாங்கிக் கொள்ள முடியும். அன்னை அந்த வலிகளை தாங்கிக் கொள்ள தன்னையே தயார்படுத்திக் கொண்டார். யூத ஆணாதிக்க கலாச்சாரத்தினால் வரும் வலிகளை அறிந்தும் அன்னை மரியாள் இறைவனின் திட்டத்தினை செயல்படுத்துகின்றார். வயிற்றில் குழந்தையைத் தாங்கிக் கொண்டிருக்கும் நிறைமாத கர்ப்பிணியான அன்னை



## உள்ளே




| | |
|---|---|
| கதையினில் கலந்த மரியா | - 05 |
| வியாகுலத்தால் பூரிப்படைந்த மரியா | - 06 |
| அன்னையின் திருத்தலங்களை நோக்கி | - 09 |
| விவிலிய குறுக்கெழுத்துப் போட்டி | - 14 |
| மரியாவுக்கு தாலாட்டு | - 16 |
| ஞாயிறு திருவழிபாட்டுத் துணைவன் | - 17 |
| மரியின் ஊழியர்சபையின் புனிதம் | - 24 |
| மாதா மன்றாட்டு மாலை | - 25 |
| திருவிவிலியம் அறிவோம் | - 28 |
| அன்னை மரியாவின் உறவில் வாழ்ந்த புனிதர்கள் | - 30 |
| ஜீவ மாதாவிடம் ஜீவன் வேண்டி | - 32 |

மரியாள் அரச கட்டளைக்கு கீழ்படிந்து மக்கள் தொகைக் கணக்கெடுப்பிற்காக புனித யோசேப்பின் சொந்த ஊருக்கு செல்கின்றார். அந்தப் பயணத்தின் வலிகள் கொடூரமானவை. அந்த வலிகளையெல்லாம் அன்னை தாங்கிக் கொண்டார்.

அன்னை மரியாள் பேறுகால வலியால் துடித்தபோது பெத்லகேம் நகரில் ஒவ்வொரு சத்திரம் சத்திரமாக ஏறி இறங்கும்போதும் அவர் அடைந்த வலிகளும் வேதனைகளும் அதிகம். உலகின் அரசரை உலகைப் படைத்த கடவுளை பெற்றெடுப்பதற்காக சரியான இடம் கூட கிடைக்காமல் அலைந்து திரிந்தபோது அன்னை மரியாள் அடைந்த வலிகளும் வேதனைகளும் அதிகம். ஆண்டவர் இயேசுவைப் பெற்றெடுத்த பிறகாவது அன்னை மரியாளின் வாழ்க்கை மகிழ்ச்சியாக மாறியதா என்றால் அதுவும் கிடையாது. சொந்த ஊரில்கூட நிம்மதியாக வாழ முடியவில்லை. குழந்தையைக் கொல்ல ஏரோது தேடுகிறான் என்று தெரிந்ததும் சொந்த தேசத்தை விட்டுவிட்டு சொந்த மக்களை விட்டுவிட்டு, சொந்த பந்தங்களை விட்டுவிட்டு எகிப்து நாட்டில் அகதியாக வாழ்ந்தபோது அன்னை மரியாள் அடைந்த வலிகளும் வேதனைகளும் அதிகம். அடிமையாக, அகதியாக வாழ்வது என்பது மிகவும் வலி நிறைந்தது. இஸ்ரயேல் மக்களின் வாழ்க்கையில் இந்த அடிமைகளாக வாழ்வது என்பது ஒன்றும் புதிது கிடையாது. என்னதான் அன்னை மரியாள் தன்னுடைய சொந்த ஊரான நாசரேத்தில் வாழ்ந்திருந்தாலும் அங்கும் ரோமைப் பேரரசுக்கு கீழே அடிமைகளாகதான் வாழ்ந்து வந்தார்கள். ஆனால் அன்னை மரியாள் நாசரேத்தில் வாழ்வதற்கும் எகிப்தில் வாழ்வதற்கும் வித்தியாசம் இருக்கிறது. நாசரேத்தில் வாழும்போது தன்னுடைய சொந்த பந்தங்களோடு இணைந்து வாழ்ந்தார். ஆனால் எகிப்தில் வாழும்போது சொந்தங்களின் துணையின்றி தன் கணவர் யோசேப்பு தன் மகன் இயேசு இவர்களோடு வாழ்ந்து வந்தார்.

ஆண்டவர் இயேசுவுக்கு 12 வயதாகும்போது எருசலேம் ஆலயம் சென்றுவிட்டு திரும்பி வரும்போது இயேசு எருசலேமிலேயே தங்கி விட்டார். அன்னை மரியாளும் புனித யோசேப்பும் இவரைப் பல இடங்களிலும் தேடி வந்தார்கள், இயேசு காணாமல்போய் மூன்று நாள்களும் முடிந்து விடுகிறது. தன் ஒரே மகனைக் காணாததால் அன்னை அடைந்த துயரத்திற்கும் வேதனைக்கும் அளவே கிடையாது. அன்னைக்கு இன்னும் வலிகளைக் கொடுத்தது ஆண்டவர் இயேசு கூறிய வார்த்தை. மூன்று நாட்கள் கழித்து ஆண்டவர் இயேசுவை கோவிலில் கண்டவுடன் அன்னை மரியாள் இயேசுவிடம் எங்கே போயிருந்தாய் மகனே? நாங்கள் உன்னை எங்கெல்லாம் தேடினோம் தெரியுமா? என்றதற்கு இயேசு கூறுகிறார். நான் என் தந்தையின் அலுவல்களில் ஈடுபட்டிருப்பேன் என்று உங்களுக்கு தெரியாதா. நிச்சயமாக இந்த வாத்தை அன்னை மரியாளுக்கு மிகுந்த வலிகளையும் வேதனைகளையும் கொடுத்திருக்கும்.

ஆண்டவர் இயேசு வளர்ந்தபிறகு மக்கள் பணியினை செய்ய ஆரம்பித்தபிறகு அவர்மீது எத்தனையோ விமர்சனங்கள் வர ஆரம்பிக்கிறது. இவன் குடிகாரன், பைத்தியக்காரன், பெருந்தீனிக்காரன், அவன் பேய்களின் தலைவனைக் கொண்டு பேய்களை ஓட்டுகிறான். இவன் வரிதண்டுபவர்களுக்கும் பாவிகளுக்கும் நண்பன். இந்த வார்த்தைகள் எல்லாம் அன்னை மரியாளின் காதுகளுக்கு வந்து சேர்கிறது. ஒரு தாயாக அன்னை மரியாள் இந்த வார்த்தைகளைக் கேட்டபொழுது நிச்சயம் மிகுந்த வேதனைகளுக்கு உள்ளாகியிருப்பார். வாழ்க்கை முழுவதும் வேதனைகள் வலிகள் இருந்தபோதிலும் அன்னை ஒளிந்து ஓடவில்லை அத்தனை வலிகளையும் தாங்கிக் கொண்டார். காரணம் கடவுள் மீது அன்னை கொண்டிருந்த நம்பிக்கை.

**வலிக்காமல் வாழ்க்கை இல்லை**
**வலிதாங்கும் இதயம் தேவை**





**ஜெனிபர் – சோழிங்கநல்லூர்**

எனக்கு வயிற்று வலி எற்பட்டது. நான் ஜீவ மாதாவிடம் மன்றாடினேன். எனக்கு சுகம் கொடுத்தால் சாட்சி சொல்வேன் என்றேன். அந்த நேரமே வலி சென்றுவிட்டது. ஜீவமாதாவுக்கு நன்றி! இயேசுவுக்கே புகழ்! மரியே வாழ்க!

**டெய்சி – சேலம்**

என்னுடைய மகளுக்கு திருமணமாகி இரண்டு ஆண்டுகளாக குழந்தை இல்லை. என்னுடைய நாத்தனார் குழந்தை இயேசு ஆலயத்தை குறித்து சொன்னார். நான் கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் வந்து என்னுடைய மகளுக்காக வேண்டினேன். பிப்ரவரி மாதம் அவள் கருவுற்றாள். இப்போது எட்டாம் மாதம், என் மருமகளும் கருவுற்றிருக்கிறாள். ஜீவமாதாவுக்கு நன்றி! இயேசுவுக்கே புகழ்! மரியே வாழ்க!

**தீபா – திருச்சி**

எனக்கு திருமணமாகி ஒரு வருடமாக குழந்தை இல்லை. எங்கள் பங்கு தந்தை சோழிங்கநல்லூர் குழந்தை இயேசு ஆலயத்தை குறித்து சொன்னார். நானும் இங்கு வந்து ஜெபித்தேன். எனக்கு ஒரு ஆண்மகனை கொடுத்தார். ஜீவமாதாவுக்கு நன்றி! இயேசுவுக்கே புகழ்! மரியே வாழ்க!

**ஜான்சியா – தூத்துக்குடி**

எனக்கு திருமணமாகி 11 ஆண்டுகளாக குழந்தை இல்லை. குழந்தை இயேசு ஆலயத்திற்கு வந்து அழுது ஜெபித்தோம். இந்த ஆண்டு பிப்ரவரி மாதம் 11-ம் தேதி ஒரு அழகிய பெண் குழந்தையை பெற்றெடுத்தேன். ஜீவமாதாவுக்கு நன்றி! இயேசுவுக்கே புகழ்! மரியே வாழ்க!

**தெரஸா**

எனக்கு திருமணமாகி இரண்டு ஆண்டுகளாக குழந்தையில்லை. மருத்துவமனைக்கு சென்றபோது கருப்பையில் பிரச்சனை இருப்பதாக தெரிந்தது. எனக்கு இங்கு குழந்தை இயேசு ஆலயம் இருப்பது தெரிய வந்தது. ஜனவரி மாதம் இங்கு வந்து அழுது ஜெபித்தேன். பிப்ரவரி மாதம் கருவுற்றேன். இப்போது எனக்கு ஆறாம் மாதம். இறைவன் எனக்கு செய்த எல்லா காரியத்திற்கும் நன்றி. ஜீவமாதாவுக்கு நன்றி! இயேசுவுக்கே புகழ்! மரியே வாழ்க!

**சார்லஸ் – சோழிங்கநல்லூர்**

நான் 15 ஆண்டுகளாக ஒரே கம்பெனியில் வேலை செய்து வருகின்றேன். எங்களது கான்ட்ரேக்ட் முடிவதால் சம்பளம் சரியாக வருவது கடினம். இதை குறித்து மிகுந்த பயம் ஏற்பட்டது. மரியன்னையிடம் அழுது மன்றாடினேன். ஜூலை மாதம் 31-ம் தேதி ஒரு நல்ல செய்தி கிடைத்தது. என்னுடைய சம்பளம் இரண்டு மடங்காக உயர்த்தப்பட்டுள்ளது. ஜீவமாதாவுக்கு நன்றி! இயேசுவுக்கே புகழ்! மரியே வாழ்க!

**செரினா – திருவாத்தூர்**

நான் திருமணமாகி மூன்று ஆண்டுகளுக்கு பிறகு கருவுற்றேன், அக்குழந்தை ஐந்து மாதங்களில் கலைந்தது. இரண்டாவது முறை கருவுற்று அக்குழந்தைக்கு உறுப்புகள் வளர்ச்சி இல்லை. அதன்பின் குழந்தை வேண்டாம் என்று நினைத்தேன். நான் டிசம்பர் மாதம் ஜீவ அன்னை திருநாள் அன்று வந்து ஜெபத்தில் பங்கெடுத்தேன். 2023-ம் ஆண்டு ஜனவரி மாதம் மறுபடியும் கருவுற்றேன், இந்த குழந்தைக்கு எந்த பிரச்சனையும் இல்லாமல் அக்டோபர் 7-ம் தேதி ஒரு ஆண் மகன் பிறந்தான். ஜீவமாதாவுக்கு நன்றி! இயேசுவுக்கே புகழ்! மரியே வாழ்க!



# ஜீவ மாதாவிடம் ஜீவன் வேண்டி

அருட்சகோ. டேவிட் ஸ்டேன்லி மஊச
சோழிங்கநல்லூர், சென்னை

ஆகஸ்டு மாதம் 3 ஆம் தேதி மாதத்தின் முதல் சனிக்கிழமை. ஜீவமாதாவுக்கு ஒப்புக்கொடுக்கப்பட்ட நாள். பக்தர்கள் கூட்டம் சற்று அதிகமாகவே காணப்பட்டது. வந்திருந்த அனைத்து மக்களும் பக்தியோடு செபமாலை, குணமளிக்கும் நற்கருணை ஆராதனை, சாட்சியப் பகிர்வு, திருப்பலி என்று அனைத்து திருவழிபாட்டு நிகழ்வுகளிலும் கலந்துகொண்டு இறையாசியை அன்னையின் பரிந்துரை வழியாக வேண்டினர். மேலும் அவர்கள் கூறிய சாட்சியங்கள் பலரது வாழ்வில் நம்பிக்கை ஒளியை பிரகாசிக்க வைத்திருக்கின்றது. அந்த சாட்சியப் பகிர்வுகள் இதோ உங்களுக்காக:

**பிரேமா – பெரம்பூர்**

நான் ஜீ.கே.எம் காலணி கிறிஸ்து அரசர் பங்கில் வசிக்கிறேன். நான் 2020-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் ஜீவ மாதா திருத்தலத்தில் வந்து குழந்தை வரம் வேண்டி ஜெபித்தேன். அதே ஆண்டில் மே மாதத்தில் தேவ மாதாவின் அருளால் குழந்தை பாக்கியம் பெற்றேன். ஜீவமாதாவுக்கு நன்றி! இயேசுவுக்கே புகழ்! மரியே வாழ்க!

**நான்சி – சோழிங்கநல்லூர்**

என்னுடைய தாயார் பெயர் சகாய மேரி ஸ்டெல்லா. கடந்த ஒரு மாதமாக உடல்நிலை சரியில்லாமல் இருந்தார்கள். நாங்களும் பல மருத்துவமனைகள் சென்றோம். அவர்களுக்கு உணவினை குழாய் வழியாக கொடுத்தோம் மற்றும் உடற்பயிற்சி சிகிச்சை கொடுக்கப்பட்டது. ஆனால் எந்தவிதமான முன்னேற்றமும் இல்லை. மாதாவிடம் இறைமகன் இயேசுவிடம் பரிந்து பேசுமாறு மன்றாடினோம். இப்போது உடல்நிலை நன்றாக உள்ளது. ஜீவமாதாவுக்கு நன்றி! இயேசுவுக்கே புகழ்! மரியே வாழ்க!

**காணிக்கை மேரி – தர்காஸ்**

எனக்கு பல நாட்களாக தலை வலி இருந்தது. மருத்துவமனைக்கு சென்ற பிறகு ஸ்கேன் செய்து பார்க்க வேண்டும் என்றார்கள். நான் ஜீவ மாதாவிடம் மன்றாடினேன். எனக்கு மாத்திரை மூலம் வலியை சரி செய்து தருமாறு மன்றாடினேன். ஆண்டவர் எனக்கு எந்த விதமான சிகிச்சையும் இல்லாமல் குணம் அளித்தார். ஜீவமாதாவுக்கு நன்றி! இயேசுவுக்கே புகழ்! மரியே வாழ்க!

**லில்லி – சோழிங்கநல்லூர்**

கடந்த ஐந்து, ஆறு வருடங்களாக சென்னையில் இடம் வாங்க வேண்டும் என்று ஆசை கொண்டோம். இந்த ஆண்டு ஏப்ரல் மாதம் ஜீவ மாதா நவநாளுக்கு வந்து மன்றாடினேன். ஜூன் மாதம் நாங்கள் ஒரு நல்ல இடத்தை பதிவு செய்தோம். ஜீவமாதாவுக்கு நன்றி! இயேசுவுக்கே புகழ்! மரியே வாழ்க!





# கதையினில் கலந்த மரியா

அருள்பணி. ஆன்றணி ஷாஜி ம.ஊ.ச



**முன்மதியுடைய மரியா**

சமீபத்தில் ஒரு காணொளியில் ஒரு கதையை கேட்டு ரசித்தேன். அதைத்தான் இங்கு எழுதுகிறேன்.

ஓர் நாட்டில் ஒரு வயதான அரசன் இருந்தான், அவன் தன் குடிமக்களுக்கே வட்டிக்கு கடன் கொடுத்து வந்தான். சரியாக வட்டி செலுத்தாதவரின் உடமைகளை பறித்து கொள்வது இவரது வழக்கம். ஒரு ஏழைக் குடும்பத்திற்கு கடன் கொடுத்தான், ஆனால் அவர்களால் வட்டி செலுத்த இயலவில்லை. ஆகவே அரசன் உடமைகளை பறித்ததோடு விடாமல் அந்த ஏழைப் பெற்றோரின் ஒரே மகளையும் தூக்கிக் கொண்டு சென்றான். அந்த இளம்பெண்ணை தான் திருமணம் செய்ய போவதாக அறிவித்தான் வயதான அரசன். இளம்பெண் அரசனிடம் வந்து ஒரு வேண்டுகோள் வைத்தாள். அரசே என்னுடைய முடிவை நானே அறிந்து கொள்ள ஒரு வாய்ப்புக் கொடுங்கள். அரசரை திருமணம் செய்ய சம்மதம், சம்மதமில்லை என்று இரண்டு துண்டு சீட்டுக்கள் எழுதிப்போடுங்கள், அதில் எது எனக்கு வருகிறதோ, அதை நான் உளமாற செய்கிறேன் என்றாள்.

அரசன் அதை ஏற்றுக்கொண்டு, தந்திரமாக செயல்பட்டு இரண்டு சீட்டுகளிலும் சம்மதம் என்று எழுதினான். இப்போது எதை எடுத்தாலும் சம்மதம் என்றுதான் வரும் என்று மனதிற்குள் நகைத்தான். அமைச்சரவை கூடியது, அனைவர் முன்பாகவும் துண்டுச் சீட்டை கீழேப் போட்டான், இளம்பெண்ணை நோக்கி, இவற்றில் ஒன்றை எடுத்துக்கொள் என்று கூறினான். அந்தப் பெண் சாதூர்யமாக அரசே எனக்கு பதட்டமாக இருக்கிறது, ஆகவே நீங்கள் ஒரு சீட்டை எடுத்து படியுங்கள், அதற்கு நேர் எதிராக நான் செய்கிறேன் என்றுக் கூறினாள். அதாவது அரசன் எடுக்கும் சீட்டில் சம்மதம் என்று இருந்தால் சம்மதமில்லை என்று பொருள்படும். இப்போது எந்த சீட்டை எடுத்தாலும் சம்மதமில்லை என்று பொருள்படும். மத் 10:16 இதோ ஓநாய்களிடையே ஆடுகளை அனுப்புவதைப்போல் நான் உங்களை அனுப்புகிறேன். எனவே பாம்புகளைப்போல முன்மதியுடையவர்களாகவும் புறாக்களைப் போலக் கபடற்றவர்களாகவும் இருங்கள். அன்னை மரியா முன்மதியின் மாதிரி. பல நூற்றாண்டு இஸ்ரயேல் வரலாற்றை உள்வாங்கி காலங்களைக் கடந்து சிந்தித்து ஆம் என்ற ஒற்றைச் சொல்லால் முன்மதியின் சிகரமாக இருக்கிறார். பாம்பின் சூழ்ச்சியில் சிக்கிய ஏவாளைப் போல் இல்லாமல் பரமனைப் பெற்றுக் கொடுத்த புதிய ஏவாளாக இருக்கின்றார். சூழ்ச்சி என்பது மனித வாழ்வில் தவிர்க்க முடியாத ஒன்று. யார் யாரை விழுங்கலாம் என்று காத்துக் கொண்டிருக்கிற காலம் இது. கண்ணுக்கு கண், பல்லுக்கு பல் என்று செயல்படாமல், இறை ஞானத்தால் நேர்மறையாக சூழ்ச்சிகளை வெல்ல கற்றுக் கொள்ள வேண்டும். அன்னை மரியாள் போல் முன்மதியுடையவர்களாய் வாழ இறைவனை நாடுவோம். சூழ்ச்சிகள் இல்லாத புதிய உலகம் படைப்போம்.

# வியாகுலத்தால் பூரிப்படைந்த மரியா

அருள்சகோதரி. டெக்லா ம.ஊ.ச.,
சேர்வைட் தலைமையகம், சென்னை.

**தொடக்கவுரை**

செப்டம்பர் மாதம் மரியின் ஊழியர் சபையைச் சார்ந்த அனைவருக்கும் மிகவும் மகிழ்ச்சியான மாதம். ஒவ்வொரு நாளும் புனித வியாகுல அன்னைக்கு சிறப்பான வணக்கம் செய்யப்படும் மாதம். இம்மாதம் 15 ஆம் நாள் அவரின் பெருவிழாவைக் கொண்டாடி சிறப்பிக்கின்றனர். திருஅவை செப்டம்பர் 14 ஆம் நாள் திருச்சிலுவை உயர்த்தப்பட்ட நாளையும், அதற்கு அடுத்த நாள் அன்னையின் வியாகுலங்களையும் கொண்டாடி மகிழ்கின்றது. இரண்டு விழாக்களும் ஒன்றோடொன்று தொடர்புடையன. நமது மீட்பிற்கு இயேசுவின் பாடுகளும், அவரது தாயின் வியாகுலங்களும் தேவையாக இருந்தன. புனித வியாகுலத் தாய் எவ்வளவு துன்பங்களை அனுபவித்தாலும் மகிழ்வுடனும், துணிவுடனும் தன் வாழ்க்கைப் பயணத்தை நடத்தினார். இதனால் அவரை வியாகுலத்தால் பூரிப்படைந்த மரியாயே என்று போற்றுகின்றோம். ஏழு வாட்களை இதயத்திலும் இயேசுவின் முள்முடி, ஆணிகளைத் தம் கரங்களில் தாங்கி இருந்தாலும் அவரது தோற்றம் சில சுரூபங்களில் மகிழ்வுடன் இருப்பதைக் கண்டு நாம் வியந்துள்ளோம். இந்த பூரிப்படைந்த அன்னையை இம்மாதத்திலே தியானிப்போம்.

**அன்னையின் வியாகுலங்கள்**

'உன் இதயத்தை ஒரு வாள் ஊடுருவும்'' என்று இறைவாக்கினர் சிமியோன் உரைத்த நேரத்திலிருந்து அன்னை மரியாவின் வாழ்வில் துன்பங்கள் தொடர்ந்தன. நிறைய வாட்கள் அவரது இதயத்தை ஊடுருவி நின்றன. ஆனால் அவர்தம் வாழ்வில் பெரும் துன்பங்களை வருவித்த ஏழு நிகழ்வுகளை நாம் அதிகம் தியானித்து அன்னையோடு ஒன்றிக்கின்றோம். அவருக்கு ஆறுதல் கொடுக்க முன்வருகின்றோம். அவையாவன: 1) சிமியோனின் இறைவாக்கு. 2) குழந்தை இயேசுவை எகிப்துக்கு எடுத்துச் சென்றது. 3) 12 வயதில் இயேசு எருசலேம் ஆலயத்தில் காணாமற்போனது. 4) கல்வாரிக்குச் சிலுவை சுமந்து சென்ற மகன் இயேசுவை அன்னை மரியா சந்தித்தது. 5) கல்வாரியில் உயிர்விடும் இயேசுவின் சிலுவையருகில் நின்றது. 6) இறந்த மகனை மடியில் வளர்த்தியது. 7) மகனைக் கல்லறையில் வைத்தபின் யோவான் வீட்டில் துன்பத்திலும் தனிமையிலும் தவித்த வியாகுல அன்னை.

இந்த வியாகுலங்களை அனுபவிக்கும் போது நம் தாய் எவ்வளவு வேதனை அடைந்திருப்பார் என்று நம்மால் உணர முடிகின்றது. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் இவை நிகழ்ந்தாலும் இன்றும் நாம் அவற்றைச் தியானித்து அவருக்கு ஆறுதல் அளிக்க விரும்புகிறார். அவரே ஒரு சில புனிதையருக்கு அளித்த காட்சிகளின் வழியாக இதை வெளிப்படையாகவே அறிவித்துள்ளார். அவரின் வியாகுலங்களைப் போற்றுவதால் நாம் அடையும் அருள் வரங்களையும் பகிர்ந்துள்ளார்.

**அன்னையின் ஏழு வாக்குறுதிகள்**

ஸ்வீடன் நாட்டைச் சார்ந்த புனித பிரிஜித், இயேசுவின் பாடுகளை அதிகம் தியானித்து வந்தார். எனவே அவருக்கு இயேசுவின் பாடுகள் பற்றிய காட்சி அருளப்பட்டது. ஒரு முறை வியாகுல அன்னை, அவரிடம், வெகு சிலர் மட்டுமே தனது வியாகுலங்களை நினைத்து வருந்துவதாகவும்,





திருமணத்தில் இத்தகைய பண்புகள் இருப்பதை பார்த்து புனித அகஸ்டின் ரசிக்கிறார். 1 கிறிஸ்துவை பெற்றுக் கொள்வதன் வழியாக அன்னை மரியா சந்ததியை அதாவது வழித்தோன்றலை தோற்றுவிக்கிறார்(offspring). 2 அன்னை மரியா, யோசேப்பை அன்பு செய்வதிலும் கிறிஸ்துவை பேணிக் காப்பதிலும் உண்மையான பற்று கொண்டிருந்தார்(Fidelity). 3 இத்திருமணத்தில் மணமுறிவு ஏற்படவில்லை எனவே இது அருளடையாளம் என்று விரிவுபடுத்தகிறார்(Sacrament).

**அன்னை மரியா அன்பின் உதாரணம்**

அன்னை மரியாவின் அன்பை உதாரணமாக காட்ட புனித அகஸ்டின் இதோ பார் உன் தந்தையும் நானும் உன்னை மிகுந்த கவலையோடு தேடிக் கொண்டிருந்தோமே லூக் 2:48 என்ற இறைவார்த்தையை மேற்கோள் காட்டுகிறார். தன்னை முன்னிலைப்படுத்தாமல் புனித யோசேப்பை முன்னிலைப் படுத்துவதிலே அன்னை மரியாவின் அன்பை பார்க்க முடிகிறது. இத்தகைய அடையாளத்தை புனித அகஸ்டின் தாழ்ச்சியின் அடையாளம் என்று அழைக்கின்றார். தாழ்ச்சியே உருவான ஆண்டவர் அன்னை மரியாவுக்கு தாழ்ச்சியைக் கற்றுக் கொடுக்காமல் போயிருப்பாரோ என்று அன்னை மரியாவின் தாழ்ச்சியைப் பார்த்து புனித அகஸ்டின் ஆச்சரியப்படுகின்றார். எனவே அன்னை மரியா தமது அன்பில் முழு உதாரணமாக திகழ்கிறார்.

**அன்னை மரியா கிறிஸ்துவின் கன்னி**

அன்னை மரியா தமது உடலாலும் உள்ளத்தாலும் இறைமகன் கிறிஸ்துவுக்கு தாயாக திகழ்வதை புனித அகஸ்டின் விளக்குகிறார். தூய ஆவியார் நிழலிட்டதால் கிறிஸ்துவை தமது நம்பிக்கையால் உள்ளத்தில் சுமந்தார் என்றும் அதே அன்னை மரியாவின் கன்னிமை தன்மைக்கு தூய யோசேப்பு பாதுகாவலராக இருப்பதை எடுத்துக் கூறி அன்னை மரியாள் தமது தாழ்ச்சியினாலும் தன்னார்வ ஆர்வத்தாலும் கிறிஸ்துவின் தாயாகவும் கிறிஸ்துவின் கன்னியாகவும் இருப்பதை புனித அகஸ்டின் உறுதிபட கூறுகிறார். கிறிஸ்துவின் கன்னியாக இருப்பதற்கு அவரது தாய்மை உதவியது என்றும், கிறிஸ்துவின் தாயாக இருப்பதற்கு அவரது கன்னிமை உதவியது என்றும் கூறுகிறார்.

**அன்னை மரியாவைப் பார்த்து வியப்படைகிறோமா நாம்?**

வானதூதர் மரியாவுக்குத் தோன்றி அருள் மிகப்பெற்ற மரியே வாழ்க! ஆண்டவர் உம்மோடு இருக்கிறார் லூக் 1.28 என்ற இறைவார்த்தையை மேற்கோள்காட்டி புனித அகஸ்டின் அன்னை மரியாவை பற்றி புகழ்ந்து பேசுகிறார். வானதூதரின் வாழ்த்துரையிலே தந்தையாம் கடவுளின் விருப்பம் நிறைந்திருப்பதை அன்னை மரியாவுக்கு இருப்பதை புனித அகஸ்டின் பார்த்து வியக்கிறார். எனவே அன்னை மரியா நம்பிக்கையால் உள்ளத்திலும் கிறிஸ்துவை தமது உடலிலும் ஏற்று கருவுற்றார் என்று இலத்தீன் மொழியில் பின்வருமாறு Fides in mente, Christus in ventre கூறுகிறார். கன்னி மரியா கருவுற்றார் என்பதைப் பார்த்து நாம் வியக்கிறோம் கருவுற்ற அன்னை மரியா கன்னியாக கிறிஸ்துவை வெளிக் கொணர்ந்தார் என்பதைப் பார்த்து நாம் இன்னும் அதிகமாக வியப்புறுகிறோம். கிறிஸ்துவை வெளிக் கொணர்ந்த பின்பும் அன்னை மரியா கன்னியாக திகழ்ந்தார் என்பதை பாத்து வியப்புற்று நாம் மயக்கம் அடைந்து வாழக் கூடாது என்பதை அழகுற கூறுகிறார் புனித அகஸ்டின்.

# அன்னை மரியாவின் உறவில் வாழ்ந்த புனிதர்கள்

அருட்பணி. டோம்னிக் ஜான் பால் ம.ஊ.ச
தஞ்சாவூர்

11



சென்ற மாத கட்டுரையில் அன்னை மரியாவைப் பற்றி புனித அகஸ்டின் கூறிய கருத்துக்களை அதிலும் சிறப்பாக கடவுளின் மீட்புத் திட்டத்தில் அன்னை மரியா எவ்வாறு பங்கெடுத்தார் என்பதைப் பற்றி பார்த்தோம். இந்த மாத கட்டுரையில் புனித அகஸ்டின் பார்வையில் அன்னை மரியாவின் நம்பிக்கையைப் பற்றி பார்ப்போம்.

**அன்னை மரியா நம்பிக்கையின் முன்மாதிரி**

புனித அகஸ்டின் அன்னை மரியாவின் நம்பிக்கையைப் பற்றி அதிகம் பகிர்கிறார். அன்னை மரியாவின் நம்பிக்கையை வீரம் நிறைந்த நம்பிக்கை என்று அழைக்கிறார். வீரம் நிறைந்த நம்பிக்கை என்று குறிப்பிட்டு அதிலிருந்து அன்னையின் அன்பு பெருக்கெடுத்து ஓடுகிறது என்ற கருத்தை வலியுறுத்தி கூறுகிறார். அன்னை மரியா கிறிஸ்துவை தமது உடலில் கருத்தரிக்கும் முன்பு தமது உள்ளத்தில் கருத்தரித்தார் என்று கூறுகிறார். எனவே இவரது நம்பிக்கை உயர்ந்தது, ஆற்றல் வாய்ந்தது, வீரம் நிறைந்தது என்று கூறுகிறார்.

**வீரம் நிறைந்த நம்பிக்கை**

அன்னை மரியா வானதூதரிடம் கூறிய நான் ஆண்டவரின் அடிமை, உம் சொற்படியே எனக்கு ஆகட்டும் லூக் 1:38 என்ற இறைவார்த்தையை சுட்டிக்காட்டி புனித அகஸ்டின் அன்னை மரியாவின் நம்பிக்கையை வீரம் நிறைந்த நம்பிக்கை என்று கூறுகிறார். இதே இறைவார்த்தையை பின்பற்றி அன்னை மரியா கிறிஸ்துவை தமது உடலில் தாங்குவதற்கு முன்பே உள்ளத்தில் தாங்கினார் என்று கூறுகிறார். உடலில் தாங்குவதற்கும் நம்பிக்கை தேவை, உள்ளத்தில் தாங்குவதற்கும் நம்பிக்கை தேவை இந்த இரண்டு உடலையும் உள்ளத்தையும் இணைத்து அன்னை மரியா உம் சொற்படியே எனக்கு ஆகட்டும் என்ற பதிலைத் தருகிறார். படைப்பின் தொடக்கத்தில் அசைந்தாடிய தூய ஆவியார் அன்னை மரியாவை ஆட்கொண்டதால் அன்னை மரியா கிறிஸ்துவை வார்த்தையான ஆண்டவரை தமது உடலில் உள்வாங்கி உள்ளத்தில் கருதரித்தார் என்று கூறுகிறார்.

**அன்னை மரியாவின் திருமணம்**

ஒவ்வொரு திருமணத்தில் இருக்கக் கூடிய மூன்று முக்கிய தன்மைகளை அன்னை மரியாவின் திருமணத்திலும் புனித அகஸ்டின் காண்பதைப் பற்றி பார்ப்போம் இப்பகுதியில். அன்னை மரியாவின் வீரம் நிறைந்த நம்பிக்கை திருமணத்திலும் பொருத்திப் பார்க்கிறார் புனித அகஸ்டின். ஒவ்வொரு திருமணத்திலும் 1 சந்ததியை தோற்றுவிக்கும் தன்மை 2 உண்மையான பற்று 3 அருளடையாளம் ஆகிய மூன்று பண்புகள் இருக்க வேண்டும். அன்னை மரியாவின்





‘நீ என்னை மறந்து விடாதே’’ என்றும் கூறியிருக்கிறார். தனது அன்பு மகன் இயேசுவின் பாடுகளின் போது தான் எவ்வளவு வேதனை அடைந்தேன் என்பதையும் மிகவும் கவலையுடன் பகிர்ந்து கொண்டிருக்கின்றார். இயேசுவின் பாடுகளின் போது தனது இதயத்தை ஐந்து ஈட்டிகள் ஊடுருவியதை உணர்ந்ததாக புனித பிரிஜித்திடம் மிகவும் வருத்தமுடன் தெரிவித்துள்ளார். ஒன்று: மகனின் ஆடைகள் களையப்பட்டு நிர்வாணமாக்கப்பட்டது. இரண்டு: அவரை ஒரு குற்றவாளியாக நடத்தியது. மூன்று: அவருடைய திருத்தலையில் முள்முடியை வைத்து அழுத்தியது. நான்கு: ‘என் இறைவா என் இறைவா ஏன் என்னைக் கைவிட்டீர்’’ என்று இயேசு அழுகையோடு கூக்குரலிட்டது. ஐந்து: அவருடைய கொடூரமான மரணம். அத்தனையும் கண்டு கண்ணீர் விட்டு நான் அழுது கீழே விழுந்தேன். ஆயினும் விவரிக்க முடியாத வேதனைகள் மத்தியிலும் எனது உள்ளத்தில் ஒரு மகிழ்ச்சி தோன்றியது. பாவம் எதுவும் செய்யாத என் மகன் இந்த உலகு மீட்படைய தன்னை பாவியாக்கி, பாவிக்குரிய தண்டனையைப் பெற்று இறந்திருக்கிறார் என்று நினைக்கும் போது என்னுள் மகிழ்ச்சி பிறந்தது. இவ்வாறு பிரிஜித்திடம் உரையாடியதாக புனிதையின் வாழ்க்கை வரலாறு கூறுகிறது.

புனித பிரிஜித்துக்கு ஒருமுறை காட்சி அருளும் போது அன்னையின் வியாகுலங்களை பக்தியுடன் தியானித்து அவற்றிற்கு வணக்கம் செலுத்துபவர்களின் வாழ்வில் கீழ்கண்ட வாக்குறுதிகள் நிறைவேறும் என மொழிந்திருந்தார். ஒன்று: ஏழு வியாகுலங்களையும் தியானிப்பவர்களின் குடும்பங்களில் அமைதி நிலவும். இரண்டு: இறைவனைப் பற்றிய மறை உண்மைகளில் அவர்களுக்குத் தெளிவு கிடைக்கும். மூன்று: அவர்களுடைய வேதனையில் நான் ஆறுதல் அளிப்பேன். அவர்களின் பணிகளில் உடனிருந்து பயணிப்பேன். நான்கு: அவர்கள் என்னிடம் கேட்பதெல்லாம் பெற்றுக் கொள்வார்கள். ஆனால் அவைகள் எனது மகனுக்கு விருப்பமானதாக இருக்க வேண்டும். மேலும் கேட்பவரின் பரிசுத்தத் தனத்திற்கு அவை தடையாக இருக்கக் கூடாது. ஐந்து: அருள் வாழ்வில் ஏற்படும் போராட்டங்களிலிருந்து அவர்களைப் பாதுகாப்பேன். ஆறு: இறப்பின் வேளையில் அவர்கள் என்னை காணக்கூடிய வகையில் நான் உதவி செய்வேன். அவர்கள் அன்னையான என் முகத்தைப் பார்ப்பார்கள். ஏழு: எனது வியாகுலங்கள், நான் சிந்திய கண்ணீர் ஆகியவற்றின் பக்தியை பரப்புவோரை நான் இவ்வுலகிலிருந்து நேரே எடுத்துக்கொண்டு போய் நித்திய பேரின்பத்தை அடைய உதவி செய்வேன். இத்தகைய வரத்தை எனது தெய்வீக மகனிடமிருந்து பெற்றுள்ளேன். எனது மகன் அவர்களுக்கு நித்திய ஆறுதலாகவும் மகிழ்வாகவும் இருப்பார். ஏனெனில் அவர்களின் பாவங்கள் அனைத்தும் மன்னிக்கப்படும்.

**அன்னை தரும் செய்தி**

அன்னையின் வியாகுலங்கள் இன்னும் தொடர்கின்றன. போர், வன்முறை, தீண்டாமை நீடிக்கும் போது, பெண்கள், சிறுமியர், பாலியல் வன்கொடுமைகளுக்கு பலியாகும் போது அன்னையின் வியாகுலங்கள் புதுப்பிக்கப்படுகின்றன. அவர் மீண்டும் மீண்டும் கண்ணீர் சிந்துகின்றார். அன்று மகனின் சிலுவையின் பின்னால் பயணித்தவர் இன்றும் துன்புறுபவரோடு பயணிக்கின்றார். மகனின் உயிர் பிரியும்போது சிலுவையின் அருகில் நின்றவர் இன்றும் அநியாயமாக உயிர்விடும் அப்பாவி பெண்கள், குழந்தைகள் அருகில் இருக்கின்றார். மரித்த மகனை தன் மடியில் கிடத்தி, தன் கண்ணீரால் அவரது திருக்காயங்களைக் கழுவிய வியாகுலத் தாயின் மடியில் ஏழைகள், பசியால் வாடுவோர், புலம்பெயர்ந்த, உறைவிடமற்ற உழைப்பாளிகள் அனைவரும் கிடத்தப்படுகின்றனர். இச்சூழலில் நம் அன்னை நம்மிடம் என்ன பேசுகிறார். அன்னையின் துயரப்பாதை, வியாகுல மாதா செபமாலை என்று அடிக்கடி செபித்து அவரின் வியாகுலங்களைக் கவலையுடன் தியானித்து அவருக்கு ஆறுதல் அளிக்க முன்வருகிறோம். நல்லது தான். அதே வேளையில்

கண்ணீரிலும், கவலையிலும் தம் காலத்தை செலவிடும் நம்மைச் சுற்றியிருக்கும் தேவையில் இருப்பவருக்கு உதவிக்கரம் நீட்டுவதும், அவர்களின் துன்பங்களில் பங்கு கொள்வதும் அன்னை மரியாவின் எதிர்பார்ப்புகளாகும்.

இரண்டாவதாக புனித வியாகுல அன்னை தனது துன்பங்களை எல்லாம் உலக மீட்பிற்காக அமைதியுடன், மகிழ்வுடன், துணிவுடன் ஏற்றுக் கொண்டது போல நாமும் ஏற்றுக்கொள்ள அழைக்கின்றார். நம்மைத் தூண்டுகின்றார். துன்பங்களை மீட்பின் கருவிகளாக மாற்ற நமக்குக் கற்றுத் தருகின்றார். அன்னையின் வழியில் நடப்பது தானே பிள்ளைகளுக்கு அழகு. துன்பமெனும் பாதையில் துணிவுடன் சென்று நிலைவாழ்வின் மகிழ்ச்சியை இவ்வுலகிலேயே அனுபவிப்போம்.

மூன்றாவதாக, நமது அன்னை மற்றுமொரு பாடத்தையும் கற்றுத் தருகிறார். அவர் சொல்ல முடியாத துன்பங்களைச் சந்தித்தார், கண்ணீர் வடித்தார். ஆனால் யார் மீதும் சுமைகளை ஏற்றவில்லை. யாருடைய கண்களிலும் நீர் வடிய விடவில்லை. கிறிஸ்தவர்களுக்கு சிலுவைகளைத் தாங்கும் பண்புதான் இருக்க வேண்டும். மற்றவர்களுடைய பாரங்களை இறக்க வேண்டும். சுமை தாங்கிகளாக இயேசுவையும், அவரைப் பின்தொடர்ந்த அவர் அன்னை வியாகுலத்தாயையும் அமைதியுடன் பின்செல்வது. எனவே இயேசுவின் காயங்களையும், அன்னையின் வியாகுலங்களையும் நம்முடையதாக்குவோம். நம் உள்ளத்தில் விவரிக்க முடியாத மகிழ்ச்சியைப் பெறுவோம். அந்த அமைதியை எவராலும் நம்மிடம் இருந்து எடுத்து விட முடியாது.

**நிறைவுரை**

இரண்டாவது உலகப் போர் முடியும் காலத்தில் அதாவது 1945 ஆம் ஆண்டு மே மாதம் 27 ஆம் நாள் ஸ்பெயின் நாட்டில் சண்டவிலா என்னுமிடத்தில் இரு இளம்பெண்களுக்கு புனித வியாகுல அன்னை காட்சி கொடுத்தார். இதைத் திருஅவை அதிகாரப்பூர்வமாக ஏற்றுக் கொண்டதாக திருத்தந்தை பிரான்சிஸ், ஆகஸ்ட் 22 நாள் மரியா விண்ணக மண்ணக அரசியான திருவிழாவன்று அறிவித்துள்ளார். மார்சலினா என்ற பத்து வயது நிரம்பிய சிறுமியும், ஆப்ரா என்ற 17 வயது இளம்பெண்ணும் தனித்தனியே ஒரே காட்சியை ஒரே இடத்தில் கண்டனர். வானத்தில் கருப்பாக ஒன்று தோன்றியது. சிறிது நேரத்தில் நட்சத்திரங்களினால் நிறைந்த கருப்பு நிற முக்காட்டை அணிந்தவராய் வியாகுல அன்னை ஒரு கசுக்கொட்டை (உாநளவரெவ) மரத்தின் மீது காட்சியளித்தார். இருவரும் அன்னையின் அரவணைப்பையும், அவர்களின் நெற்றியில் அவர் அன்புடன் முத்தமிடுவதையும் உணர்ந்தனர். காட்சியின் போது மார்சலினாவிடம், அன்னை, கற்களும், முட்களும், கசுக்கொட்டை பழத் தோடுகளும் நிறைந்த பாதையில் மண்டியிட்டவாறு தன்னை நோக்கி நடந்து வரக் கூறினார். தயங்கிய rpWkpapk;‘பயப்படாதே, உனக்கு ஒன்றும் ஆகாது’’ என்றும் நம்பிக்கையூட்டினார். இக்காட்சிக்குப் பிறகு இருவரும் நோயுற்றோரை, முதியவர்களை, அனாதைகளைக் கவனிப்பது போன்ற பிறரன்புப் பணிகளில் தம் வாழ்நாளைச் செலவிட்டனர்.

ஏழை எளியவர், துன்புறுவோர் மேல் வியாகுல அன்னை தொடர்ந்து கரிசனை கொள்கிறார் என்பதை திருஅவைக்கும் உலகிற்கும் அவர் வெளிப்படுத்துகிறார். இவர்களின் வாழ்வில் நாம் அக்கறை காட்டும் போது அன்னையும் மகிழ்கிறார். ஏனெனில் இந்த சிறிய சகோதர சகோதரிகளுக்கு உதவி செய்யும் போது நாம் இயேசுவுக்கே செய்கிறோம். இதனால் இறுதி நாளில் அவரின் வலப்புறம் நிற்கும் பேறு பெறுவோம். அன்னை இவ்வுலகில் துன்புற்றாலும் விண்ணுலகில் ஒளிரும் நட்சத்திரங்களின் நடுவில் மிளிர்கின்றார். அவரைப் போன்று துன்பப் பாதையில் மகிழ்வுடன் நடக்கப் பழகுவோம். உழைப்பும் தியாகமும் நிறைந்த வாழ்வுக்கு எப்போதுமே பரிசு உண்டு. புனித வியாகுல அன்னையின் வியாகுலங்களை இன்றைய தாய்மார்கள் படும் எண்ணற்ற வேதனைகளோடு ஒப்பிட்டுப் பார்ப்போம் அப்போது அவைகள் அர்த்தம் பெறும். நமது பக்தி முயற்சிகளும் விடுதலைச் செயல்பாடுகளுக்கு இட்டுச் செல்லும். இந்த அனுபவத்தில் நமது வியாகுல அன்னை என்றுமே பூரிப்படைந்தவராகவே இருப்பார்.





மாற்றம் செய்தபோது 7 நூல்கள் அதிகமாயின அவை 1 தோபித்து 2 யூதித்து 3 சாலமோனின் ஞானம் 4 சீராக் 5 பாருக் 6,7 மக்கபேயர் 1,2. இதை யூதர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. ஆனால் தூய ஆவியின் ஏவுதலால் எழுதப்பட்டதால் நமது கத்தோலிக்க திருஅவை 7 நூல்களையும் சேர்த்து 46 நூல்களாக ஏற்றுக் கொண்டது. மார்ட்டீன் லூத்தர் அவர்கள் புதிய ஏற்பாட்டின் 27 நூல்களை ஏற்றுக் கொண்டாலும் எபிரேயர், யாக்கோபு, யூதா, திருவெளிப்பாடு முதலியவைகளை புதிய ஏற்பாட்டின் இறுதியில் வைக்க விரும்பினார். தற்போது அனைத்து கிறிஸ்தவ சபையினரும் இணைந்து வெளியிட்டுள்ள பொது திருவிவிலியம் மொழி பெயர்ப்பில் பழைய ஏற்பாடு 39 நூல்கள், இணை திருமுறை நூல்கள் 7, புதிய ஏற்பாடு 27 நூல்கள் சேர்த்து 73 நூல்களாக திருவிவிலியம் வெளியிடப்பட்டுள்ளது.

கிபி 2-ம் நூற்றாண்டில் தாசியன் போன்ற அறிஞர்கள் விவிலிய நூல்களை சிறுநூல்களாக பிரித்தார்கள். கிபி 1216-ல் ஸ்டீபன் லாங்டன் புதிய ஏற்பாட்டு நூல்களை அதிகாரங்களாக பிரித்தார். கிபி 1448-ல் ராபி நாத்தான் பழைய ஏற்பாட்டு நூல்களை அதிகாரங்களாகவும் வசனங்களாகவும் பிரித்தார். கிபி 1550-ல் ராபர்ட் ஸ்டீபன் என்பவர் புதிய ஏற்பாட்டு வசனங்களை பிரித்து எண்வரிசை இட்டார்.

இன்று விவிலியம் 1189 அதிகாரங்களையும் 3173 வசனங்களையும் கொண்டுள்ளது. விவிலியத்தின் மூல ஆசிரியர்களின் கையெழுத்து பிரதிகள் நமக்கு கிட்டவில்லை. பழமையான கையெழுத்து பிரதிகள் வத்திக்கான் சுவடி, சீனாய் சுவடி ஆகிய கிபி 4-ம் நூற்றாண்டை சேர்ந்த சுவடிகள் உள்ளன. அச்சமயத்தில் வாழ்ந்த புனித இரேணிமுஸ் முழு விவிலியத்தையும் கிரேக்க மொழியிலிருந்து லத்தீனில் மொழி பெயர்த்தார். தப்பறைக் கொள்கைகளை எதிர்த்து பாதை மாறிய கிறிஸ்தவர்களை மீண்டும் திருஅவைக்குள் கொண்டு வந்தார். இவரை கிறிஸ்தவ இறையியலாளர்களின் தந்தை என அழைத்தனர். 1545 முதல் 1563 வரை நடந்த திரிதெந்தீன் சங்கம் இவரது மொழி பெயர்ப்பை அதிகார பூர்வமாக ஏற்றுக்கொண்டது. கடந்த நூற்றாண்டு வரை வுல்கத்தா (பொதுமக்கள்) எனப்படும் இம்மொழி பெயர்ப்பே பயன்படுத்தப்பட்டு வந்தது. தற்போது 1995-ல் மூல மொழியிலிருந்து மொழிமாற்றம் செய்யப்பட்ட திருவிவிலியத்தையே பயன்படுத்துகிறோம்.

ஆசியாவில் தமிழில்தான் முதலில் மொழிபெயர்ப்ப செய்யப்பட்டது. கிபி 1715-ல் பர்த்தலமேயு சீகன்பால்கு என்னும் லுத்தரன் சபை போதகர் இப்பணியை செய்தார். கிபி 1727-ம் ஆண்டு முழு விவிலியமும் தமிழ் மொழியில் வெளியானது. 1995-ல் விவிலியத்தின் தமிழ் பொது மொழி பெயர்ப்பு மதுரையில் வெளியிடப்பட்டது. 46 இந்திய மொழிகளிலும் 329 பிறநாட்டு மொழிகளிலும் முழு விவிலியம் வெளியிடப்பட்டுள்ளது. 633 மொழிகளில் புதிய ஏற்பாடும், 2009 மொழிகளில் விவிலியத்தின் முக்கிய பகுதிகள் மட்டும் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. அச்சு இயந்திரத்தை கண்டுபிடித்த குதன்பர்க் என்பவர் தான் கண்டுபிடித்த அச்சு இயந்திரத்தில் 1450-ம் ஆண்டு ஜெர்மனியில் மைன்ஸ் என்ற இடத்தில் முதன் முதலாக விவிலியத்தை அச்சில் ஏற்றினார். விவிலியம் பாலஸ்தீனம், பாபிலோன், எகிப்து, ரோமை, கொரிந்து நாடுகளில் 40 பேர்களால் எழுதப்பட்டது. இதன் ஆசிரியர் (Author) ஆண்டவரே. பழைய ஏற்பாடு வரலாறு இறைவாக்கு, ஞானம் என 3 வகையாக பிரிக்கலாம். 21 வரலாறு நூல்களும் 18 இறைவாக்கு நூல்களும் 7 ஞான நூல்களும் உள்ளன. புதிய ஏற்பாட்டிலும் 4 வரலாறு நூல்கள் (மத், மாற், லூக், யோ) இறைவாக்கு நூல்(திருவெளிப்பாடு) திருத்தூதர்கள் எழுதிய திருமுகங்கள் அனைத்தும் ஞானநூல்கள்.

உலக வரலாறு எல்லாவற்றிலும் அது நடந்த காலகட்டத்தை குறிப்பிடும்போது கிமு, கிபி என குறிப்பிடுவதை காணலாம். கிமு என்றால் கிறிஸ்து பிறப்பதற்கு முன் என்றும் கிபி என்றால் கிறிஸ்து பிறப்பிற்கு பின் என்றும் பொருளாகும். வரலாற்று ஆசிரியரான போடோ என்பவர்தான் கிபி என்ற சொல்லை முதலில் பயன்படுத்தினார். கிமு என்ற சொல்லை யோனியன் எக்ஸிக்யூஸியஸ் என்பவர் பயன்படுத்தினார்.

இம்மாபெரும் புனித புதையலை நம்முடைய உரிமை சொத்தாக கொண்டுள்ள நாம் அதன் மேன்மையை உணராமலும் அதை வாசிக்காமலும், ஏன் தொடாமல் கூட வீட்டில் பூட்டி வைத்திருக்கிறோம். இனி இன்று முதல் ஒருநாளிற்கு ஒரு அதிகாரமாவது வாசித்து பலன் அடைவோம்.



# திருவிவிலியம் அறிவோம்

திருமதி. ரோஸி ஜார்ஜ், பூம்பொழில் நகர், சென்னை

Bible (பைபிள்) என்ற ஆங்கில வார்த்தையின் தமிழாக்கம்தான் விவலியம். ஆதாம் காலத்திலிருந்து மோசே காலம் வரை எந்த நூலோ அல்லது குறிப்புகளோ இருந்ததாக தெரியவில்லை. வழிவழியாக வந்த நம்பிக்கையினால் வாழ்ந்து வந்தனர். மோசே காலத்தில்தான் எழுத்து வடிவம் பெற்றதாக தெரிகிறது. ஆண்டவர் மோசேயிடம் தம்முடைய மாட்சியால் இஸ்ரயேல் மக்கள் எகிப்திலிருந்து வெளியேறியது, செங்கடலை கடந்தது, பாலைநிலத்தில் மன்னாவை உணவாக உண்டது எல்லாம் வருங்கால தலைமுறையினர் அறியும்படி எழுதி வைக்கச் சொன்னார் (விப 12.14). இது உன் கண்களுக்கு இடையே சீட்டுபட்டமாகவும் கையில் அடையாளமுமாக அமையட்டும் (விப 12.16) உன் வீட்டு கதவுகளிலும் நுழைவாயிலும் அவற்றை எழுது (இச 6.9) என்றும் கூறினார். மோசே தொடக்க நூல், விடுதலைப் பயணம், லேவியர், எண்ணிக்கை, இணைச்சட்டம் ஆகிய 5 நூல்களை எழுதினார். இந்த 5 நூல்களையும் யூத மக்கள் 'தோரா' என்று பெயரிட்டனர். இவை கிமு 1200-ல் மோசே எழுதியிருப்பார் என்பது மரபு வழிகருத்து. கிமு 8-ம் நூற்றாண்டில் ஆமோஸ் இறைவாக்கினர் உரைத்த இறைவாக்கு தூதுரையே எழுத்துவடிவம் பெற்ற முதல் நூல். கிபி 7-ம் நூற்றாண்டில் ஆண்டவர் எரேமியாவிடம் நான் உனக்கு சொன்ன சொற்களை எல்லாம் ஏட்டு சுருளில் எழுதிவை (எரே 30.2) என்று சொன்னார். கிமு 515-ல் எஸ்ரா, நெகேமியா போன்றோர் கடவுளின் திருச்சட்டத்தை மக்களின் முன்னிலையில் வாசித்தனர். பழைய ஏற்பாட்டில் நூல்கள் பல காலக்கட்டத்தில் எழுதப்பட்டவை. பலரால் பல கட்டங்களில் எழுதப்பட்ட திருப்பாடல்கள் முக்கியத்துவம் பெற்று யூதர்களின் வழிபாட்டின்போது பயன்படுத்தப்பட்டன.

புதிய ஏற்பாட்டு நூல்கள் இயேசுவின் காலத்தில் எழுதப்பட்டவை அல்ல. இயேசு பாடுபட்டு மரித்து, உயிர்த்து விண்ணேற்றமடைந்து 21 ஆண்டுகளுக்கு பின் ஏறக்குறைய 51-ம் ஆண்டில் திருத்தூதர் பவுல் தெசலோனிக்கருக்கு எழுதிய திருமுகமே முதலாவதாக எழுதப்பட்டது. நற்செய்திகளில் மத்தேயுதான் முதலில் எழுதினார் என்று சொல்லப்பட்டாலும் மாற்குதான் முதலில் எழுதியிருக்க வேண்டும் என்று அறிஞர்களும் ஆராய்ச்சியாளர்களும் கருதுகின்றனர். மாற்கு பேதுருவுடன் சேர்ந்து திருத்தொண்டாற்றியதால் பேதுருவின் அறிவுரைப்படி இயேசுவின் நற்செய்தியினை எழுதியிருக்க வேண்டும் எனவும் மத்தேயுவும், லூக்காவும் அன்னை மரியிடம் கேட்டு அறிந்தவைகளையும் தாங்கள் நேரில் கண்ட அனுபவங்களையும் வைத்து எழுதியிருக்க வேண்டும். இவர்கள் கி.பி. 70-க்கு பின்னும் யோவான் கிபி 90-க்கு பிறகும் நற்செய்தியை எழுதியிருக்க வேண்டும் என கருதப்படுகிறது.

யூதர்களில் பலர் கிரேக்க மொழி பேசுபவர்களாகவும் வாணிப நிமித்தம் பல நாடுகளுக்கு குடிபெயர்ந்து போனதினாலும் அவர்களுக்காக பழைய ஏற்பாட்டின் எபிரேய பாடத்தை கிரேக்க மொழியில் செப்துவாசிந்த் (Septuagint) என்னும் 70 பேர் கொண்ட குழு மொழி பெயர்த்தது. இது எழுபதின்மர் மொழி பெயர்ப்பு என அழைக்கப்படுகிறது. இவ்வாறு மொழி





# அன்னையின் இ திருத்தலங்களை நோக்கி...

அருள்பணி. சகாயராஜ் ம.ஊ.ச., இத்தாலி.



## அன்னையின் திரு இரத்தத் திருத்தலம், ரே – இத்தாலி - 1

(Madonna del sangue, Re – Italy)

இயற்கை எழில் கொஞ்சும் இத்தாலி நாட்டின் வடபகுதியில் ஆல்ப்ஸ் மலைத்தொடர் பகுதியில் அமைந்துள்ளது பியமோன்தே மாகாணம் ஆகும். எங்கு நோக்கினும் பசுமை பச்சாடை உடுத்திய மலைகளும், பள்ளத்தாக்குகளும் நம் கண்களுக்கு விருந்தாய் அமைந்து, இறைவனின் ஒப்பற்ற படைப்பாற்றலை போற்றி புகழ வாய்ப்பளிக்கின்றன. அன்னையின் திருத்தலம் அமைந்துள்ள ரே என்ற கிராமம் ஆல்ப்ஸ் மலைத்தொடரில் கடல் மட்டத்திலிருந்து 800 மீட்டர் உயரத்திலும், சுவிஸ் நாட்டிலிருந்து 6 கி.மீ. தொலைவிலும் அமைந்துள்ளது. இத்தாலியில் கடும் வெப்பம் நிலவும் ஜீலை மாதத்தில் இப்பகுதியில் இளம் வெயிலும், மிதமான குளிருமாக ரம்மியமான தட்பவெப்பம் நிலவுகிறது. குளிர் காலங்களில் கடும் குளிரும், கடுமையான பனிபொழிவும் நிறைந்த பகுதியாகவும் உள்ளது. இன்று வானுயர்ந்து அன்னையின் திருத்தலம் பல நூற்றாண்டுகளுக்கு முன் ஒரு சிறிய பங்கு ஆலயமாக மட்டுமே இருந்துள்ளது. இந்த பங்கு ஆலயமானது புனித மௌரிசியோவிற்கு அர்ப்பணிக்கப்பட்ட ஆலயமாக இன்றும் இருந்து வருகிறது.

கி.பி. 15ஆம் நூற்றாண்டில் விவசாயத் தொழிலை மட்டுமே நம்பி வாழ்ந்த ஏழை, எளிய மக்களை கொண்ட சிறு கிராமமாகவே ரே இருந்துள்ளது. கதிரவன் கண்விழிக்கும் முன்பே தாங்களும் துயில் எழுந்து தங்கள் வயல்களுக்கு சென்று பணியாற்றி உச்சி வெயிலில் வீடு திரும்புவதை வழக்கமாக கொண்டிருந்தனர். அந்தி வேளையில் தெருக்களில் ஒன்று கூடி உரையாடுவதை பெரியவர்களும், தங்கள் வயதொத்தவர்களோடு விளையாடுவதை சிறு பிள்ளைகளும் வழக்கமாகக் கொண்டிருந்தனர். இளம் பிராயத்தினர் தங்களுக்குரிய துடுக்கோடு இருப்பது என்பது இயல்பே.

அன்றிலிருந்து இன்றுவரை இத்தாலி நாட்டின் கிராமங்கள் மற்றும் நகரங்களின் மையப்பகுதி என்பது ஆலயத்தின் முன் உள்ள பரந்து விரிந்து சதுக்கமாகவே இருந்து வருகிறது. ரே கிராமத்தின்




மையப்பகுதியாக ஆலயத்தின் முன் உள்ள சதுக்கமாகும். மாலை நேரத்தில் இச்சதுக்கத்தில் இளம் பிள்ளைகள் விளையாடுவதை வழக்கமாக கொண்டிருந்தனர். கி.பி. 1494 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 29ஆம் தேதி, ரே கிராமத்திலும் வழக்கமாக புலர்ந்தது. வசந்த காலத்தின் மாலை நேரத்தின் இளம் தட்பவெட்பம் விளையாடுவதற்கு உகந்ததாக அமைந்திருந்தது. சிறுவர்கள் ‘பியோதெல்லா’ என்கிற விளையாட்டை விளையாடி கொண்டிருந்தனர். இவ்விளையாட்டு தமிழகத்தில் விளையாடப்படும் ‘உரியடிப்பானை’ போன்ற விளையாட்டாகும். உரியடிப்பானை விளையாட்டில், ஒரு பானையில் காசு மற்றும் பிற பொருட்களை வைத்து உயரத்தில் கட்டி, கண்களை துணியால் கட்டி அப்பானையிலிருந்து திசை திருப்பி ஒருவரை அனுப்புவார்கள். எவர் ஒருவர் பானையின் திசையறிந்து சென்று பானையை அடித்து உடைக்கிறாரோ அவர் அப்பானையில் உள்ள பொருட்களை பரிசாக பெறுவார். ‘பியோதெல்லா’ விளையாட்டில், ஒரு பானையில் அப்போட்டியில் பங்கெடுப்போர் அனைவரும் காசை போட, அப்பானையானது தரையில் தலைகீழாக வைக்கப்படும். ஒரு குறிப்பிட்ட தூரத்தில் இருந்து யார் ஒருவர் குறிபார்த்து கல் எறிந்து, அப்பானையை உடைக்கிறாரோ அவரே பரிசு பொருளுக்குரியவராவார். இவ்விளையாட்டில் ஆர்வமாக விளையாடிக்கொண்டிருந்தவர்களில் லோந்தார்கோ குடும்பத்தை சார்ந்த ஜியோவான்னி சுகோன்னே மற்றும் கோமலோ ஆகியோரும் அடங்குவர். சுகோன்னே துடிப்புள்ள இளைஞராகவும், சற்று முன் கோபியாகவும் இருந்தார். அப்பகுதியில் உள்ள பலரின் சண்டையிடுவது அவரின் வழக்கமாக இருந்ததால் அனைவரும் அவரிடத்திலிருந்து சற்று விலகிருப்பதையே விரும்பினர், பெற்றோரும் தங்கள் குழந்தைகளை எச்சரித்து வைத்திருந்தனர்.

இவ்விளையாட்டு நடைபெறும் சதுக்கத்தில் பங்கு கோவிலின் நுழைவாயில் அமைந்திருந்தது. அந்நுழைவாயிலின் தாழ்வாரத்தின் வலது புறச்சுவரில் அன்னை மரியாள் குழந்தை இயேசுவுக்கு பாலூட்டும் திருஉருவம் ஒன்று அற்புதமாக வரையப்பட்டிருந்தது. உரோமானிக் கலைநயத்தை சார்ந்த அவ்வோவியத்தில் அன்னை ஒரு உயர்ந்த அரியாசணத்தில் அமர்ந்து, தன் மார்பில் பால் குடித்துக்கொண்டிருக்கும் குழந்தை இயேசுவை தன் இடக்கையால் அரவணைத்து கொண்டிருப்பது





அன்பைப் பெறும் ஒவ்வொருவரும் சொல்லும் வார்த்தை. நான் கடவுளைக் காண்கிறேன் என்பதுதான். கட்புலனாகா கடவுளைக் காலத்தின் கட்டத்துக்குள் அதாவது வரலாற்றுக்குள் கொண்டு வந்தவர் இவர்தான். இது அன்னையில் செயல்பாடு இல்லாமல் வேறேது. இதை நினைக்க நினைக்க ஆச்சரியத்தில் அமிழ்ந்துப் போகச் செய்கிறது அன்னையின் அன்பு. இதைப் புரிந்துகொள்ள முனையும்போது பெரும் புதிராகவே தோன்றுகிறது. வானளவு உயர்ந்திருக்கும் கடவுளின் அன்பை மனிதர்களின் நடுவில் அதுவும் புரிந்து கொள்ளாத மனிதர்கள் நடுவில் கொண்டு வந்த அன்னை மரியின் அன்பை வர்ணிக்க முடியாது. படைத்த கடவுளின் அன்பை உணர இறைமகனே இவ்வுலகும் பார்க்கும்படியான ஒரு அரிய வாய்ப்பை மனித குலத்திற்கு ஏற்படுத்தி தந்தவர் அன்னை மரியா.

இதற்காகவே நாம் இவருக்கு அன்பில் கடன்பட்டிருக்கிறோம். இன்றைய மனித இதயங்கள் அதிகம் கலங்குவது அணுகுண்டு கலாச்சாரத்தால் அல்ல. மாறாக அன்பற்ற இதயங்களால்தான். இது கவிஞன் ஒருவன் இந்த சமூகத்தை கவனமாய் உற்றுப் பார்த்ததால் உதிர்த்த வார்த்தைகள். இப்படி கலங்கி கொண்டிருக்கும் மனங்களுக்கு அன்னையின் அன்பு ஆறுதலை ஏராளமாய் அள்ளித் தருகிறது.

கடலில் சிப்பி இருப்பது எவ்வளவு உண்மையோ
பாலில் வெண்ணெய் இருப்பது எவ்வளவு உண்மையோ
கரும்பில் இனிப்பு இருப்பது எவ்வளவு உண்மையோ
அத்தனை உண்மை அன்னைக்குள் அன்பு இருப்பது.

கரும்பு தின்ன கூலி வேண்டுமா? என்ற பழமொழி சொல்கிறது. கரும்பு தின்ன ஒருபோதும் கூலி தேவையில்லை என்றுதான். இதையொத்ததே அன்னை மரியாவை அன்பு செய்வது. ஏனெனில் அவர் நம் தாய். தாயை அன்பு செய்ய எந்த சேயும் எதிர்பார்க்கும் எதையும் முன் வைப்பதில்லை. அன்னை மரியா அன்பை வெளிப்படுத்தியிருக்கிறார். அன்பு செய்வோம். ஏனெனில் நம் அன்புக்கு பாத்திரமானவராகவும் அன்புக்கு உரியவராகவும் இருக்கின்றார். நாம் அன்பில் விழ வேண்டாம். மாறாக அன்பில் வாழ்வோம். (Let us not fall in love but grow in love).

அன்பைத் தரும் யாவருக்கும் அன்னை மரியாவைக் காட்டுவோம். அவர்களும் அன்பை அறியட்டும். பிறகு அன்பு செய்யட்டும்.

தோன்றும் பெயர் நம் அன்னை மரியின் பெயர்தான். ஏன்? கடவுள் என்னும் சூரியனிலிருந்து மரியா என்னும் சந்திரன் முடிந்த மட்டும் அன்பெனும் ஒளியை கிரகித்து உள்வாங்கி அதை தேவைப்பட்ட நேரத்தில் அதாவது மீட்புக்குப் பயன்படுத்தும் வகையில் செயல்படுத்தியது.

இவ்வாறு அன்னை அன்பின் பிரதிபலிப்பாய் ஜொலித்ததே இதற்கு காரணம். அடிப்படையில் கடவுளை அன்பு செய்தார் மரியா. ஆகவே மனித குலத்தின் அன்புக்கு உரியவரானார் அல்லது பாத்திரமானார். இவரிடம் அன்பு பிரதிபலிக்கிறதென்றால் எப்படி வெளிப்படையாக அறிய முடியும்? என்ற கேள்விக்கு விவிலியம் விரைந்தோடி வந்து பதில் தருகிறது.

**இதோ உன் தாய் - இதோ உன் மகன் (யோவா 19, 26-29)**

எந்த உறவாக இருந்தாலும் அன்புதான் அடிப்படை. தாய்-சேய் அன்பு இதற்கு உச்சக்கட்ட உதாரணமாக இருக்கிறது. நாம் வாழும் உலகில் தாய் என்ற வார்த்தை இன்று பல விதங்களில் பயன்படுத்தப்படுகிறது, வாடகைத் தாய், பெற்றெடுத்தத் தாய், வளர்ப்புத் தாய் என்று. அன்னை மரியா இயேசுவைத் தன் உதிரத்தில் தாங்கிப் பெற்றெடுத்த அன்பின் அன்னை. தன் சதையையும் தன் இரத்தத்தையும் இயேசு மனுவுரு எடுக்க வழங்கிய தாய். இதோ உன் உடல், இதோ என் இரத்தம் என ஒவ்வொரு திருப்பலியிலும் குருவானவரால்(மறு கிறிஸ்து) சொல்லப்படும் மொழிகளுக்கு உண்மையிலே சொந்தக்காரர் அன்னை மரியாதான்.

**அன்பின் தத்துவம்**

அன்பு செய்தால் அன்பு செய்யப்படுதலின் அடிப்படைத் தத்துவம். ஏனெனில் கொடுத்தலும் வாங்கலுமே மனித வாழ்வின் நியதி. அன்பிற்கும் இந்தத் தத்துவம் பொருந்தும். அன்பு செய்கிறாயா? நீ அன்பு செய்யப்படத் தகுதி பெறுகிறாய் என்பதே இது உணர்த்தும் உண்மை. அன்னை மரியா போல கடவுளின் கட்டளைகளைப் பிரமாணிக்கமாய் கடைப்பிடித்து செயல்படுத்தியதன் வழியாக இவர் கடவுளை அன்பு செய்தார் என அறிந்து கொள்ள முடிகிறது. அது மட்டுமில்லாமல் தன் அயலாரையும் அன்பு செய்தார். அன்னை மரியா எலிசபெத்துக்கு உதவுதல், கானாவூர் திருமணத்தில் பிறருக்காக கவலைக் கொண்ட தாய். இதைத்தான் ஏற்கனவே கடவுளின் அன்பு அவளில் பிரதிபலிக்கிறதென அறிகிறோம்.








போன்று வரையப்பட்டுள்ளது. அன்னையின் தலையை சுற்றி பிரகாசமான ஒளிவட்டமும், கருணையோடு நோக்கும் கண்களும், தனது வலது கரத்தில் மூன்று ரோசா மலர்கொத்தை தாங்கி ஆசீர் அளிப்பவராகவும் அன்னை காட்சி தருகிறார். அன்னையின் திருஉருவத்திற்கு கீழ், “அன்னையின் உதரத்தில் தந்தையின் ஞானம் உறைகிறது” (“IN GREMIO MATRIS SEDET SAPIENTIA PATRIS”) என்ற சொற்றொடர் எழுதப்பட்டுள்ளது. ஆலயத்தை கடந்து செல்வோர் அனைவரும் அன்னையின் திருஉருவப்படத்திற்கு முன் சிலுவை அடையாளம் வரைந்து செல்வது வழக்கம்.

பக்தியும், புனிதமும் தவமும் அவ்விடத்திடத்தில் சிறுவர்கள் பொதுவாக மகிழ்ச்சியோடு விளையாடுவதுண்டு. அன்றும் அப்படித்தான் விளையாடிக்கொண்டிருந்தனர். பலர் அவ்விளையாட்டின் மையப்பொருளாயிருந்த பானையை குறிவைத்து கல் எறிந்தனர். ஆனால் ஒருவராலும் பானையை உடைக்கமுடியவில்லை. விளையாட்டில் கைதேர்ந்திருந்த சுக்கோனேவுக்கும் அந்நிலைதான். பானை தன் குறியிலிருந்து தப்பித்துவிட்டது என்ற கோபத்தில், தன் கையிலிருந்த கல்லை கோபத்துடன் தூக்கி எறிய, அக்கல் ஆலயச் சுவரில் இருந்த அன்னையின் நெற்றி பகுதியை தாக்கியது. குல் அன்னையின் திருஉருவத்தின் மேல் விழுந்ததால் அனைவரும் பதற்றம் அடைந்தனர். சுக்கோனேவும் தன் செயல் குறித்து வருந்தி அன்னையின் முன் முழந்தாள்படியிட்டு மன்னிப்பு கேட்டு வீடு திரும்பினார். ஆனால், இரவெல்லாம் உறக்கம் இன்றி குழம்பிய மனத்தோடே இருந்தார்.

அவ்விரவில் ரே கிராமத்தை சார்ந்த ஜியோவான்னி மினோலா மற்றும் கரவெஜ்ஜா கிராமத்தை சார்ந்த அந்தோணியோ அர்திச்சியோ ஆலயத்தை கடந்து சென்றனர். இருவரும் ஆலயத்திலிருந்து பிரகாசமான ஒளிவருவதைக் கண்டனர். ஆலயத்தில் யாரோ மெழுகுதிரியை அணைக்காமல் விட்டு சென்றுவிட்டனரோ என்று கருதினர். மேலும், அச்சம் காரணமாக அருகில் சென்று பார்க்காமல் அவ்விடத்தை விட்டு அகன்றனர். அதிகாலையில் கோவிலை திறக்கசென்ற, உபதேசியார் ஸ்தேபனோ சிஸ்லா, ஆலயமுகப்பில் உள்ள அன்னையின் திருஉருவத்திற்கு முன் வெண்ணிற ஆடையணிந்த பெண் ஒருவர் முழந்தாள் படியிட்டு செபிப்பதை கண்டார். ஆனால், கூர்ந்து கவனியாமல்

விரைந்து சென்று ஆலய மணியை அடித்துவிட்டு திரும்பி வரும்போது செபித்து கொண்டிருந்த பெண்மணியை காணவில்லை. ஸ்தேபனோ முந்தின நாள் மாலையில் நடைபெற்ற சம்பவம் குறித்து கவலைப்படவில்லை. அன்னையின் திருஉருவத்தையும் உற்று நோக்கவில்லை. அவரைப் பொறுத்த வரையில் அந்நிகழ்வுகள் சாதாரமாணவையாகவே தோன்றின.



காலைநேரத்தில் ஆலயத்தை கடந்து சென்ற பர்த்தலமேயோ லியோனே தன் வழக்கத்தின்படி, அன்னையின் திருஉருவத்திற்கு முன் சிலுவையடையாளம் வரைந்து கொண்டபின், அன்னையின் நெற்றியை தொட்டு ஆசீர்வத்தித்த போது, தன் கை பிசுபிசுப்பாக இருப்பதை உணர்ந்தார். அது என்னவென்று அவர் பார்த்த போது அவருக்குள் ஒரு அச்சம் உருவானது. ஏனென்றால், அவரது கையில் இரத்தம் தோய்ந்திருந்ததை உணர்ந்தார். அதை உறுதிப்படுத்திக்கொள்ள மீண்டும் தொட்டுப்பார்த்து, அன்னையின் நெற்றியிலிருந்து கசிவது இரத்தம் என்பதை உணர்ந்து, பயம் கலந்த ஆச்சரியத்தோடு பெருத்த குரலெழுப்பி அனைவரையும் கூப்பிட்டார். ஆலயத்தின் முகப்பில் ஏற்பட்ட சந்தடியைக் கேட்டு என்ன நடக்கிறது என்பதை காண பங்கு தந்தை ஜியாக்கமோ அங்கு








# மாதா மன்றாட்டு மாலை

11



அருள்பணி. லூர்துசாமி ம.ஊ.ச.
நவதுறவியர் இல்லம், மாமல்லபுரம்.

**மகா அன்புக்கு பாத்திரமாயிருக்கிற மாதாவே**

தன்னகத்தே நன்மை கொண்டதாய் ஒன்று இருக்கிறதென்றால் அது அன்பைத் தவிர வேறொன்றுமில்லை.

பொதுவாக நம் பழக்கவழக்கங்களில் ஒன்று கடிதம் எழுதுவது. நம் கடிதங்கள் அன்பை தாங்கிச் செல்லும் ஒரு ஊடகம். ஏனெனில் நம் கடிதங்களில் ஆரம்பத்தில் அன்புக்குரிய என்ற வார்த்தையை பயன்படுத்துவதை இன்றும் நம் வழக்கத்தில் வைத்திருக்கிறோம். இதன் பொருள் என்ன? நாம் கடிதத்தில் குறிப்பிடும் அந்த நபர் நம் அன்புக்கு உரியவர். அதாவது தகுதி கொண்டவர் என்பதுதானே இதன் பொருள். இது நம் அன்னை மரியாவுக்கு எப்படி பொருந்தும்? அன்னை மரியா அன்புக்குரியவர் என்றால் நம் அன்புக்கு உரிமை உடையவர் என்று பொருள். அப்படியானால் அன்னை மரியா எதனால் நம் அன்புக்கு உரியவர்? நம் அன்பில் அவருக்கு உரிமை இருக்கிறதா? ஆம் என்பதுதான் மனித குலத்தின் ஒருமித்த பதிலாக இருக்கிறது. அதற்கு காரணங்களும் உண்டு. அதென்ன என்பதை ஒருமித்த மனநிலையில் தியானிப்போம்.

**அன்னை அன்பின் பிரதிபலிப்பு**

அன்பென்பது ஒரு இறையியல் பண்பு
அதில்தான் உள்ளது மனிதனின் மாண்பு

இது தூய பவுலடியாரின்(1கொரி 13) வார்த்தைகள் அடிப்படையாய் வைத்து இசைக்கப்பட்ட ஒரு பாடலின் வரிகள். இந்த இறையியல் பண்பை அன்பு முழுவதுமாக வெளிப்படுத்திச் செயல்படுத்தும் எவரும் கடவுளின் நெருங்கிய உறவில் பங்கெடுக்கிறார்கள். கடவுளின் சாயலை உணரச் செய்கிறார்கள். யார் யார் கடவுளின் நெருங்கிய உறவில் பங்கெடுத்தவர்கள் என நாம் அட்டவணைப்படுத்த முனைந்தால் பல பெயர்களை எழுத முடியும். அவ்வாறு எழுதும்போது நம் மனதில்



# முத்திபேறு போர்லி நகரத்து போனவெந்தூரா OSM




அருட் சகோ. பிலிப் ஜோஸப் ம.ஊ.ச

இவர் 1410 ஆம் ஆண்டு போர்லி நகரத்தில் பிறந்தார். அதே நகரத்தில் உள்ள மரியின் ஊழியர் துறவற இல்லத்தில் சேர்ந்து, தேவையான அனைத்து படிப்புகளையும் முடித்து குருவானவர். இவரின் திறமையை கண்டு 1448 ஆம் ஆண்டு வெனிஸ் (Venice) நகருக்கு இறையியல் படிப்பில் மேற்படிப்பு படிக்க அனுப்பப்பட்டார். நல்ல முறையில் தேர்ச்சி பெற்ற பின், இவரின் இறைவாக்குரைக்கும் திறமையையும் அதை விளக்கும் திறமையை கண்டு இத்தாலி நாட்டின் பல நகரங்களுக்கு போதிக்கும் பணிக்காக அழைக்கப்பட்டார். இது ஒரு புறம் இருந்தாலும், மரியின் ஊழியர் குடும்பத்திலும் பல முக்கியமான பொறுப்புகளில் இருந்து, சபையின் ஆன்மிக வளர்ச்சிக்கு உதவினார். இவ்வாறு அவர் உரோமையில் ஒரு முக்கிய பொறுப்பில் இருந்தபோது, திருத்தந்தை நான்காம் சிக்தூஸ் (Sixtus IV) ஒரு சிறப்பு அங்கீகாரத்தை வழங்கினார். அதன்படி, போனவெந்தூரா இத்தாலி நாட்டில் உள்ள அனைத்து நகரங்களிலும் திருத்தந்தையின் பெயரில் போதிக்கவும் மறையுரை ஆற்றவும் செய்யலாம். இவரின் ஆன்மிக சிந்தனைகள் மிகவும் துல்லியமாகவும் நமது உள்ளதையும் துளைக்கும் அளவுக்கு இருந்ததால், அப்போது சபையின் அதிபராக இருந்த அருட்தந்தை அந்தோனியோ (Fra Antonio Alabanti), போனவெந்தூராவின் சிந்தனைகளை மற்றவர்களுக்கு பரிந்துரைப்பதிலும், அதை பற்றி பேசுவதிலும் கருத்தாய் இருந்தார். இக்காலத்தில் சபை அதிபருக்கும், சபையில் உள்ள ஆதிகால கட்டளைகளை தீவிரமாக கடைபிடிக்கும் சகோதரர்களுக்கும் (Observance) இடையே பல மன கசப்புகள் உருவாகின. இதனால் சபை இரண்டாக பிரியும் அளவிற்கு அபாயம் ஏற்பட்டது. ஆனால், போனவெந்தூரா தனது ஆன்மிக ஆற்றலின் மூலம் இரு குழுக்களும் இடையே அமைதியை ஏற்படுத்தினார். இதனால், 1488 ஆம் ஆண்டு உதவி சபை அதிபராக தேர்வு செய்யப்பட்டார். தனது பணி காலத்தில் சபை ஆன்மிகத்திலும் சகோதர அன்பிலும் வளர பல முயற்சிகளை மேற்கொண்டார். மிகவும் தீவிரமானஆன்மிக பக்தி முயற்சிகளை மேற்கொண்டார். இருந்தாலும் தனது இறுதி நாள் வரை போதிக்கும் பணியை விட்டுவிடவில்லை. 1491 ஆம் ஆண்டு புனித வாரத்தில் ஊதினே (Udine) என்கிற ஊரில் போதிக்கும் போது உடல் சோர்வுற்று அதே வாரத்தில் புனித வியாழன் அன்று இறைவனடி சேர்ந்தார். அன்றிலிருந்தே இவரின் மன்றாடுகளை சாதாரண இறைமக்கள் மட்டும் அல்லாமல், நகரத்தின் தலைவர்களும் கேட்டு அவரின் கல்லறைக்கு செல்வார்கள். பின்னர் அவரின் உடலை ஊதினே நகருக்கே எடுத்து வந்து விட்டனர். இன்றும் அவரின் உடல் நமது மரியின் ஊழியர் ஆலயத்தில் உள்ளது. 1911 ஆம் ஆண்டு திரு அவையின் புனித வழிபாட்டுக் குழு இவரின் நினைவு நாளை கொண்டாட அனுமதி தந்தது. அதன்படி செப்டம்பர் 6 ஆம் நாள் இவரின் நினைவு நாள் கொண்டாடப்படுகிறது.








விரைந்து வந்தார். அன்னையின் நெற்றிலியிலிருந்து வடிவது இரத்தம்தான் என்பதை உணர்ந்தார்.

ரேவில் நடக்கும் புதுமையை கேள்விப்பட்ட சுற்றுப்புற மக்கள் அனைவரும் ஆச்சரித்தோடு அன்னையை தரிசிக்க வந்தனர். எங்கு நோக்கிலும் மக்கள் திரள். அன்னையை அண்டி வந்த அவர் வெளிப்படுத்தும் செய்தியை உணரும் ஆர்வத்தில் இருந்தனர் மக்கள். திரண்டு வந்த மக்கள் அனைவரும், "ஆண்டவரே இரக்கமாயிரும்" என உரத்த குரலில் செபித்தனர். பங்குத் தந்தை அன்னையின் திருஉருவத்தின் கீழ் ஒரு வெண்ணிற பலிப்பீடத்துகிலை விரித்து அதன் மீது ஒரு பூசை இரசப்பாத்திரத்தை வைத்தார். அன்னையின் நெற்றியிலிருந்து வழிந்த இரத்தமானது அப்புனித பாத்திரத்தில் சேகரமானது. ஆன்னையின் நெற்றியிலிருந்து இரத்தமானது ஏப்ரல் 29 முதல் மே 18ஆம் தேதி வரை தொடர்ந்து வழிந்துகொண்டேயிருந்தது. இந்த அதிய நிகழ்வை அந்நாட்களில் அப்பகுதியின் அந்நாளைய ஆளநர்களாக இருந்த தனியேலே கிரேஸ்பி மற்றும் ஆஞ்சலோ ரொமானே இருவரும் தங்களின் குறிப்புகளிலும், அரச ஆவணங்களிலும் பதிந்து, இந்நிகழ்வுகள் குறித்த சம்பவங்களை ஒரு பத்திரத்தில் எழுதி கையொப்பம் இட்டு ஆலயத்திற்கு அளித்துள்ளனர். அறுநூறு ஆண்டுகளுக்கும் பழமையான இந்த இரண்டு வரலாற்று சாசனங்களும் இன்றும் இந்த ஆலயத்தில் பத்திரமாக பாதுகாக்கப்பட்டு வருகின்றன. மேலும், அன்னையின் நெற்றியிலிருந்த வழிந்த இரத்தமும் திருப்பண்டமாக இன்றும் இந்த ஆலயத்தில் பாதுகாக்கப்பட்டு வணக்கம் செலுத்தப்படுகிறது. இப்பங்கு ஆலயம் பேராலயமாக வளர்ந்த வரலாற்றை அடுத்தத் தொடரில் காண்போம்.





திருப்பயணம் தொடரும்...........

# விவிலியக் குறுக்கெழுத்துப் போட்டி
# சாமுவேல் II



ச. பெ. அமல்ராஜ். ம.ஊ.ச.பொ.நி, திருச்சி - 21



**வலமிருந்து இடம்**

1) தாவீது தமக்கு செய்தி கொண்டு வந்த இளைஞனிடம், நீ எங்கிருந்து வருகிறாய்? என்று மீண்டும் வினவ, நான் ஒரு வேற்றினத்தான், …………… என்று மறுமொழிக் கூறினான்.

4) அவர் ஏதோம் முழுவதும் படைத்தளங்களை அமைத்தார். ஏதோமியர் ………… அவருக்கு கப்பம் கட்டலாயினர்.

5) சவுலின் புதல்வனான யோனத்தானின் மகன் மெபிபொசேத்து தாவீதிடம் வந்து முகம் குப்புற வீழ்ந்து வணங்கினான். மெபிபொசேத்து என்று தாவீது அழைக்க, இதோ! உம்………… என்று அவன் பதிலிறுத்தான்.

8) நலமாய்ச் சென்று வா, என்று அரசர் அவனிடம் கூற………….. புறப்பட்டு எபிரோனுக்குச் சென்றான்.

9) தன் அறிவுரை ஏற்றுக் கொள்ளபடவில்லை என்று கண்டதும் அகிதோபல் தன் கழுதைக்குச் சேணமிட்டு, தன் நகருக்குப் புறப்பட்டு தன் வீட்டை அடைந்தான். தன் வீட்டை ஒழுங்குபடுத்திவிட்டு அவன் நான்று கொண்டு இருந்தான். அவனை அவனுடைய தந்தையின் கல்லறையில் …………….. செய்தனர்.

12) ஏனெனில், சாவின் அலைகள் என்னை சூழ்ந்துக் கொண்டன:………… சுழல்கள் என்னை மூழ்கடித்தன.

14) அவர்கள் அசாவேலின் சடலத்தைத் தூக்கி வந்து பெத்லகேமிலிருந்த அவனுடைய தந்தையின் கல்லறையில் அடக்கம் செய்தார்கள். யோவாபும் அவனுடைய ஆள்களும் ……. முழுவதும் பயணம் செய்து, பொழுது புலர்ந்ததும் எபிரோனை அடைந்தனர்

**இடமிருந்து வலம்**

2) சவுலின் வீட்டாருக்கும் தாவீதின் வீட்டாருக்கும் பூசல் நிலவிய போது, சவுலின் வீட்டில் அப்னேர் தன்னையும் வலிப்படுத்திக்…………

3) முப்பது வயதில் அரசரான தாவீது, நாற்பது ……………. ஆட்சி புரிந்தார்.

6) ………….. மனைவி தன் கணவன் இறந்துவிட்டதைக் கேள்வியுற்று அவருக்காகப் புலம்பி அழுதார்கள்.





நாமும் பிறர் நன்மை செய்வதைக் கண்டு பொறாமை கொள்ளாமல் அவர்களை பாராட்டவும் அங்கீகரிக்கவும் முயற்சி செய்வோம்.

**இரண்டாம் வாசக முன்னுரை**

இப்பகுதியில் பணக்காரர்களுக்கு விடுக்கப்படும் எச்சரிக்கையாக அமைந்துள்ளது. ஏனென்றால் அவர்கள் பணம் திரட்டுவதிலும், சேமிப்பதிலும் அதிக கவனம் செலுத்தினர். மேலும் அவர்கள் தங்கள் வயல்களில் வேலை செய்யும் கூலியாட்களுக்கு உரிய கூலியை நேரத்தில் கொடுக்காமலும் இருந்தனர். எந்த ஒரு வேலைக்கான கூலியையும் அந்த நாளின் மாலைக்குள் கொடுக்க வேண்டும் என்பதே மோசே சட்டமாக இருந்தது. இதை கடைபிடிக்காமல் ஏழைகளுக்கு தீங்கு செய்து கொண்டிருந்ததால் யாக்கோபு பணக்காரர்களை எச்சரிக்கின்றார். நாம் நமது கிறிஸ்தவ வாழ்வில் அவர்களை போல வாழாமல் ஏழைகள், அநாதைகள், கைம்பெண்கள், வறியோர் ஆகியோர் மீது அக்கறை கொண்டு வாழ இறையருள் வேண்டுவோம்.

**மன்றாட்டுக்கள்**

1 அன்பின் இறைவா, எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், இருபால் துறவியர் அனைவரும் உமது அருளை நிறைவாக பெற்று, பெற்ற அழைத்தலுக்கு உண்மையுள்ளவர்களாக வாழவும், மேலும் எல்லாரையும் ஒன்றாக அரவணைத்து செல்லக்கூடிய நற்பண்பை பெற்றிடவும் அருள்புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

2 வழிகாட்டும் தெய்வமே இறைவா, மக்கள் அனைவரும் இவ்வுலக வாழ்வில் தங்கள் மனதைச் செலுத்துவதிலே நோக்கமாயிராமல் ஆன்மீக வாழ்வில் அதிக கவனம் செலுத்த அருள்புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

3 வாழ்வளிக்கும் வள்ளலே இறைவா, சமுதாயத்தில் வாழும் தாழ்த்தப்பட்டோர், விதவைகள், அனாதைகள், கைவிடப்பட்டோர் இவர்களின் வாழ்வு மலர அருள்புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

4 அன்பின் இறைவா, உமது கட்டளைகளைக் கடைபிடித்து நீதி நேர்மையோடு வாழவும் தீய வார்த்தைகள் பேசுவதைத் தவிர்த்து ஒவ்வொரு சொல்லும் உமக்கு ஏற்றவையாகவும் உள்ளத்தில் எழும் எண்ணங்கள் உமக்கு உகந்தவையாகவும் இருக்க அருள்புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

5 கருணைக் கடலே இறைவா, ஆடம்பரமாகவும் இன்பமாகவும் வாழ்ந்து பணத்தையும் நேரத்தையும் வீணாக்கி மனம்போன போக்கில் வாழாமல் பாவ வாழ்க்கையை விட்டு கிறிஸ்துவோடு இணைந்து வாழ அருள்புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

4 அன்பின் இறைவா, நாங்கள் ஒவ்வொருவரும் உம்மை போல பிறருக்குப் பணிவிடை புரிந்து உமது அருளையும் அன்பையும் பெற்று வாழ அருள்புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.
5 அன்பின் இறைவா, சிறுபிள்ளைகளை நீர் எவ்வளவு அன்போடும் அரவணைத்தும் பாதுகாக்கின்றீரோ அதேபோல நாங்கள் எங்கள் பிள்ளைகளின் நலனில் அக்கறையுடையவர்களாக வாழ அருள்புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

## பொதுக்காலம் 26-ம் ஞாயிறு (29.09.2024)
## எண் 11:25-29 யாக் 5:1-6 மாற் 9:38-43,45,47-48

### முன்னுரை

வாய்ப்பு கிடைக்கப் பெறாத ஒருவன் வாய்ப்பு அதிகம் பெற்றவனை நினைத்து ஆதங்கப்படுகிறான் என்கிறார் வில்லியம் ஜேம்ஸ்.

இன்றைய உலகில் சுயநலம், ஆணவம், தற்பெருமை கொண்டவர்கள், நல்ல காரியங்களைத் தாங்களும் செய்வதில்லை, மற்றவர்களையும் செய்யவிடுவதுமில்லை. ஆர்வமாக செயல்பட விரும்புகிறவர்களுக்கு இவர்கள் தடைக்கற்களாகவே செயல்படுகிறார்கள். இந்த நிலை பழைய ஏற்பாடு காலத்திலும் இருந்தது என்று இன்றைய வாசகங்கள் உணர்த்துகின்றன.

இயேசுவின் போதனைகளுக்கும், செயல்பாடுகளுக்கும் அவரது மதிப்பீடுகளுக்கும் எதிராக செயல்படுகின்றவர்கள் இறைவனுக்கு எதிராகச் செயல்படுகின்றவர்களே மாறாக உண்மைக்கும், மனித மாண்புக்கும் உழைக்கின்றவர்கள், இறைவனின் சார்பாகவே செயல்படுகின்றார்கள் என்கிறது இன்றைய இறைவார்த்தை வழிபாடு. கடவுளின் அருள் தனக்கு மட்டுமே கடவுளின் ஆவியானவர் தமக்கு மட்டுமே என்று யாரும் உரிமை பாராட்ட முடியாது. பழைய ஏற்பாட்டில் யோசுவாவின் செயலும் புதிய ஏற்பாட்டில் யோவானின் செயலும் ஒரே நோக்கம் கொண்டது. அதனால்தான் இயேசு அதனைக் கண்டிக்கிறார். யோசுவாவிடமும், யோவனிடமும் இருந்த குறுகிய மனநிலை நம்மில் இருக்கக் கூடாது. இறைவனின் செயல்பாட்டிற்கு எல்லை வகுக்க முடியாது என்பதையும் நல்லவைகள் எங்கிருந்தாலும் அதை அங்கீகரித்து நமதாக்கிக் கொள்ள வேண்டும் என்ற திறந்த மனநிலையோடு வாழ அருள் வேண்டி இத்திருப்பலியில் பங்கு பெறுவோம்.

### முதல் வாசக முன்னுரை

பழைய உடன்படிக்கையில் மோசேவுக்கு உதவியாக 70 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டனர். அவர்களும் மோசேயிடம் இருந்து கடவுளின் ஆவியில் பங்கு பெற்று இறைவாக்கு உரைத்தனர். ஆனால் இக்குழுவைச் சாராத இருவர் இறைவாக்கு உரைத்த போது யோசுவா அவர்களைத் தடைசெய்யும்படி மோசேயிடம் கேட்டார். மோசே தடைசெய்யாமல், தமக்கிருந்த வல்லமை மற்றவர்களிடம் இருப்பதைக் கண்டு மோசே பொறாமை படவில்லை மாறாக மகிழ்ச்சி அடைகிறார்.





7) பின் அரசரிடம் சென்று ............... நீ இவ்வாறு பேச வேண்டும், என்று கூறி அவள் என்ன பேச வேண்டும் என்றும் யோவாபு சொல்லிக் கொடுத்தார்.
11) தாவீதின் காலத்தில் மூன்று ஆண்டுகள் தொடர்ந்து பஞ்சம் ஏற்பட்டது. தாவீது ஆண்டவரின் திருவுள்ளத்தை நாடினார். கிபாயோனியரைச் சவுல் கொலை செய்ததன் காரணத்திற்காக.........மீதும் அவன் வீட்டார் மீதும் இரத்தப்பழி உள்ளது என்றார் ஆண்டவர்.
13) சவுலின் மகன் இஸ்பொசத்து இஸ்ரயேல் மீது அரசனாய் தொடங்கிய போது அவனுக்கு வயது நாற்பது. ............. ஆண்டு அவன் அரசனாய் இருந்தான்.

**மேலிருந்து கீழ்**

1) யூதாவின் மக்கள் வந்து, தங்கள் குலத்தின் அரசராக தாவீதை திருப்பொழிவு செய்தார். யாபோசு கிலயாதின் ஆள்கள் சவுலை ............ செய்தார்கள். என்று அவர் தாவீதிடம் கூறினர்.
2) நேரின் மகன் அப்னேரின் ........... அரசருக்கு பங்கில்லை, என்று மக்கள் அனைவருக்கும் அனைத்து இஸ்ரயேலுக்கும் தெரிய வந்துள்ளது.
5) இது தாவீதுக்க அறிவிக்கப்பட, ........... தம் பணியாளரை சந்திக்க ஆளனுப்பினார். உங்கள் தாடிகள் வளரும் வரை எரிகோவில் தங்கி பிறகு திரும்புங்கள் என்ற அரசர் சொல்லியனுப்பினார். ஏனெனில் அவர்கள் மிகவும் அவமானப்பட்டிருந்தனர்.
6) நீவிர் செய்ததை என்னென்போம்! உயிரோடிருந்த குழந்தைக்காக நீர் ............. அழுதீர்: ஆனால் குழந்தை இறந்ததும் எழுந்து உணவு கொண்டீரே! என்று அவருடைய பணியாளர் அவரிடம் கூறினார்.
9) பர்சில்லாய் வயது முதிர்ந்தவர்: எண்பது வயதினர்: பெரும் பணக்காரர். அரசர் மகனயிமில் தங்கியிருந்த போது .............. தேவைகளைக் கொண்டவர்.
10) ............. தம்மோடிருந்த வீரர்களை கணக்கெடுத்து, அவர்கள் மீது, ஆயிரத்தவர்,நூற்றவர், தலைவர்களை நியமித்தார்.
14) தாவீது பாபால் பெராட்சிம்வரை வந்து அவர்களை தோற்கடித்தார். தகர்த்தெறியும் வெள்ளம் போல் ஆண்டவர் என் எதிரிகளை உன் கண்முன்னே தகர்த்தெறிந்தார் என்ற தாவீது கூறினார். ஆகவே தான் ............ பாகால் பெராட்சியம் என்று அழைக்கப்படுகிறது

**கீழ்ருந்து மேல்**

3) .............. பேழையைக் கொணர்ந்து அதற்கென நிறுவிய கூடாரத்தின் நடுவில் அதை வைத்தார்கள். தாவீது ஆண்டவர் முன்பு எரிபலிகளையும் நல்லுறவுப் பலிகளையும் செலுத்தினார்.
4) அதற்கு நாத்தான் நீர் விரும்பிய அனைத்தையும் செய்துவிடும்: ஏனெனில் ஆண்டவர் என்னோடு இருக்கிறார் என்று .............. சொன்னார்.
7) அம்மோன் தன் சகோதரி தாமாருக்காக மிகவும் ஏங்கி நோயுற்றான். அவள் கன்னியாக இருந்ததால். அவளிடம் ............... ஒன்றும் செய்யமுடியவில்லை.
8) இதெல்லாம் என்ன? என்று சீபாவை அரசர் கேட்க கழுதைகள் அரச வீட்டார் சவாரி செய்யவும்................அத்திப்பழமும் இளைஞர்கள் உண்ணவும், திராட்சை இரசம் பாலைநிலத்தில் களைப்புற்றோர் குடிக்கவும் தான் என்று சீபா பதிலளித்தான்.
11) ............... அறிவுக்கூர்மையுள்ள ஒரு பெண் நகரிலிருந்து குரல் கொடுத்து, கேளுங்கள்: கேளுங்கள். தயைகூர்ந்து யோவாபை இங்கே வரச் சொல்லுங்கள். நான் அவரிடம் பேச வேண்டும் என்றான்.
12) பாசெபத்து மூவருள் முதல்வனாக இருந்த............ எஸ்னீயன் அதினோ என்று அழைக்கப்பட்டான். ஏனெனில் அவன் ஒரே சமயத்தில் எண்ணூறு பேரைத் தக்கிக் கொன்றான்.
13) நான் மிகவும் மனவேதனையுற்றுள்ளேன். ஆண்டவரது கையில் நாம் விழுவோம். ஏனெனில் அவரது ................ பெரிது! மனிதரின் கையில் விழவேண்டாம் என்று தாவீது கூறினார்.

விடைகள் அனுப்ப இறுதி நாள் 25-09-2024

# மரியாவுக்கு தாலாட்டு

16



கலைச்சுடர் முனைவர். ஜோ. விண்ணரசன், மேல்வழி

அருகமணி பெட்டகமே – நாங்கள்
அரும்புகின்ற முத்தமிழே
அல்லல்படும் எங்களுக்கு
ஆறுதலாய் வந்தாயோ

முத்துமணி இரத்தினமே – நாங்கள்
அருந்துகின்ற முக்கனியே
முடக்கப்பட்ட மக்களையும்
தூக்கிவிட வந்தாயோ

தித்திக்கும் செங்கரும்பே – பாவ
தீட்டுப்படா செம்மலரே
திக்கற்ற எங்களுக்கு
திசைகாட்ட வந்தாயோ

வானத்து வெண்ணிலவே - இவ்
வையத்து பொன்னிலவே
ஏழையராம் எங்களையும்
ஏற்றிவிட வந்தாயோ

பாலைவன பூந்தளிரே - இன்ப
சோலைவன பூங்குயிலே
வக்கற்ற எங்களுக்கு
வாதாட வந்தாயோ

இயற்கையெழில் ஓவியமே - இந்த
இகத்தினழியாக் காவியமே
நீசர்களாம் எங்களுக்கு
ஈசனுற வந்தாயோ

கிழக்குமுக சூரியனே – பேயை
வெளுக்கவந்த சாதனமே
அடிமைகளாம் எங்களுக்கு
விடுதலையாய் வந்தாயோ

யூதகுல சிங்கப்பெண்ணே - இம்
மாதர்குல செம்மைப்பெண்ணே
பெண்ணடிமை புத்தியினை
வென்றொழிக்க வந்தாயோ

மாசுஇல்லா உற்பவியே – எங்கள்
மாசைநீக்கும் நற்கதியே
பாவிகளாம் எங்களுக்கு
பரிந்துபேச வந்தாயோ





தாழ்ச்சியால் மீட்டார். நான்தான் என்ற ஆணவம் சரிசமம் என்று எண்ணி பணி செய்து தன்னலம் மறந்து பிறர் நலம் காண்பவரே உண்மையில் முதல்வர், பெரியவர், பணியாளர் என்பதே இயேசுவின் போதனை. ஒருவரிடம் உள்ள பணத்தால், பதவியால் அவர் உயர்வடைவதில்லை, பணிவால், தாழ்ச்சியால்தான் உயர்வடைய முடியும் என்பதை உணர்ந்து வாழ முயல்வோம்.

**முதல் வாசக முன்னுரை**

விசுவாசத்தில் தளர்ந்து தடுமாறும் நிலையில் இருப்பவர்களை எச்சரிக்கின்றது இன்றைய முதல் வாசகம். கிரேக்கர்களுடைய சிலை வழிபாட்டில் மூடத்தனத்தை அடையாளம் காட்டுவதோடு, ஆண்டவரின் மீது அச்சம் கொள்வதும் அவரது திருச்சட்டத்தின்படி ஒழுகுவதுமே உண்மையான உயரிய ஞானம் என்று இவ்வாசகம் கோடிட்டுக் காட்டுகிறது. போலி ஞானத்தினின்று உண்மையான ஞானத்தை பிரித்தறிந்து அதன் வழியே நடக்க இவ்வாசகம் அழைப்பு விடுக்கின்றது.

**இரண்டாம் வாசக முன்னுரை**

போட்டி மனப்பான்மை கொண்டுள்ள நபர்கள், ஒருவர் மீது ஒருவர் பொறாமை கொண்டு மற்றவரை அழிக்க முயற்சி செய்வது அல்லது அவரை செயலற்றவராக்க முனைவது வழக்கமாக நமது வாழ்வில் காண்கின்ற ஒன்று. நம் வாழ்வில் நடைபெறும் பெரும்பாலான கொடுஞ்செயல்கள் மற்றும் குழப்பங்களுக்கு காரணமாக இருப்பது பொறாமையே என்று இரண்டாம் வாசகத்தில் புனித யாக்கோபு கூறுகிறார். கடவுளின் அருளும், கொடையும் தன்னலமில்லாத, தாழ்ச்சியுள்ள மனிதருக்கே அருளப்படுகிறது. அவரும் இறைவனிடம் நல்லதையே கேட்கிறார். கட்டுக்கடங்காத ஆசையே அனைத்து தீமைகளின் ஆணிவேர் என்பதை உணர்ந்து பொறாமை, கட்சி மனப்பான்மையை தவிர்த்து பொறுமையோடும், தாழ்ச்சியோடும் வாழ்ந்து இறை அருள் பெறுவோம்.

**மன்றாட்டுக்கள்**

1 அன்பின் இறைவா, எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், இருபால் துறவியர் மற்றும் பொதுநிலையினர் அனைவரும் இறை அச்சத்தோடு வாழ்ந்து அதன் பலனாக உமது ஞானத்தை பெற்று நன்மையும் பொறுமையும் நிறைந்த மக்களாக வாழ அருள்புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

2 அன்பின் இறைவா, எமது அரசியல், சமூக, சமய தலைவர்கள் பணிவிடை பெற அன்று பணிவிடை புரியவே தங்களுக்கு அதிகாரம் அருளப்பட்டுள்ளது என்பதை உணர்ந்து மக்களின் தேவைகளை நிறைவேற்றி நல்ல தலைவர்களாக வாழ அருள்புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

3 அன்பின் இறைவா, நாங்கள் ஒவ்வொருவரும் எங்களது அனுதின வாழ்வில் வருகின்ற துன்பங்களையும் பிரச்சனைகளையும் கண்டு கலங்காமல் மனத்திடத்தோடும் நம்பிக்கையோடும் அவற்றை எதிர்கொள்ள கூடிய அருள்புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**மன்றாட்டுக்கள்**

1 மீட்பளிக்கும் இறைவா, திரு அவையின் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவியர் மற்றும் பொதுநிலையினர் அனைவரும் உமது திட்டத்தையும் திருவுளத்தையும் உய்த்துணர்ந்து திருஅவையைத் திறம்பட வழிநடத்த வேண்டிய ஞானத்தை கொடுத்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

2 நம்பிக்கையின் இறைவா, நாங்கள் கிறிஸ்துவில் நம்பிக்கை கொண்டு அவரது பணிகளில் உடன் உழைப்பாளராக எங்களையும் இணைத்துக் கொள்ள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

3 எங்களுக்காக சிலுவையில் அறையுண்ட இயேசுவே உமது வேதனைகளையும் பாடுகளையும் தியானிக்கும் நாங்கள் எங்களுக்கு அடுத்திருப்பவர்கள் படுகின்ற பாடுகளிலிருந்து அவர்களை விடுவித்து அமைதியான வாழ்வு வாழ வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

4 அன்பு இறைவா, பொறாமை எண்ணத்தால் நல்ல மனிதர்களை ஒழித்துக் கட்ட வேண்டும் என்ற எண்ணத்திலிருந்து மனமாறி நல்ல எண்ணம் படைத்தவர்களாக வாழ வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

5 துன்பத்தில் ஆறுதல் தரும் இறைவா, இயேசுவின் அன்பை உணர்ந்த நாங்கள் எங்கள் சொல்லில் மட்டுமல்லாமல், செயலிலும் உமது உண்மையான அன்பை விளங்கச் செய்ய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**பொதுக்காலம் 25-ம் ஞாயிறு (22.09.2024)**
**சா.ஞா 2:12,17-20 யாக் 3:16-4:3 மாற் 9:30-37**

**முன்னுரை**

இன்றைய உலகில் பணம், பதவி, புகழ், சுயநலம் இவைகள் மனித சமுதாயத்தை சிதைத்துக் கொண்டிருக்கிறது. இதற்கெல்லாம் அடிப்படைக் காரணம் நான் பெரியவனா? நீ பெரியவனா? என்பதுதான். ஆணவம் அதிகமாகும்போது நம்முடைய அறிவு மழுங்கி விடுகிறது. ஆணவம் சுயநலத்தின் வெளிப்பாடு. சுயநலம் அதிகரிக்கும்போது போட்டியாகிறது. அங்குதான் யார் பெரியவன் என்ற பிரச்சனை தோன்றுகிறது. இது சாதாரணக் குடும்பத்திலிருந்து உலக நாடுகள் வரை மோதலாகவே அமைகிறது. யார் பெரியவன் என்ற கேள்விக்கு ஆழமான பதில் தேடுவதே இன்றைய வழிபாட்டின் மையக்கருத்து.

இந்த போட்டி மனப்பான்மை தவறானது என்பதை இறைமகன் இயேசு இன்றைய நற்செய்தியில் சுட்டிக் காட்டுகிறார். கடவுளுடைய எண்ணங்களும் வழிமுறைகளும் மனிதருடைய எண்ணங்களிலிருந்தும் வழிமுறைகளிலிருந்தும் முற்றிலும் வேறுபட்டவை. மனிதனின் வழியோ சுயநலத்தின் வழி, ஆணவத்தின் வழி. கடவுளின் வழியோ பொறுமையின் வழி, தாழ்ச்சியின் வழி. முதல் பெற்றோர்களின் ஆணவத்தால்தான் சாவும், பாவமும் புகுந்தது. அந்த பாவத்தையும் சாவையும் கிறிஸ்து





# ஞாயிறு திருவழிபாட்டுத் துணைவன்



அருள்பணி. ஆனந்த் லூர்துராஜ் ம.ஊ.ச,
அமலோற்பவ மாதா ஆலயம், பூம்பொழில்நகர்.

**பொதுக்காலம் 23-ம் ஞாயிறு (08.09.2024)**
**எசாயா 35:4-7 யாக் 2:1-5 மாற் 7:31-37**

**முன்னுரை**

முழு மனித வாழ்வே இறைவனின் மகிமை என்கிறார் புனித எரோனிமுஸ். வாழ்வை முழுமையாக குறைவின்றி வாழ ஒவ்வொரு மனிதனும் முயற்சி செய்கின்றான். வாழ்வின் ஒவ்வொரு நாளிலும் இந்த முழுமையை நோக்கிப் பயணம் செய்கின்றான். பிறப்பு முதல் இறப்பு வரை கருவறை முதல் கல்லறை வரை இந்தப் பயணம் தொடர்ந்து கொண்டே இருக்கிறது. முழு மனிதத்தை நோக்கி பயணம் செய்யாத ஒருவர் மனிதன் என்ற வரையறைக்குள்ளே வரத் தகுதியற்றவர். இப்படிப்பட்ட மனித வாழ்விற்கு தடையாக இருக்கும் காரியங்களை இன்றைய இறைவார்த்தை வழிபாடு சுட்டிக் காண்பித்து அவற்றின் மட்டில் விழிப்பாயிருக்க நமக்கு அழைப்பு விடுக்கின்றன.

முழு மனித வாழ்வுக்கு முதல் தடையாக இருப்பது உடல் ஊனமும் அதோடு சேர்ந்து வரும் மன ஊனமும் மற்றொரு தடை பணத்தின் அடிப்படையில் பிறரை மதிப்பது. இந்த உலகத்திற்கு நிறைவான வாழ்வை வழங்க வந்த இயேசு, இன்றைய நற்செய்தியில் காது கேளாத, வாய் பேச இயலாத ஊனமுற்ற ஒருவரின் மேற்கூறிய இரு குறைகளையும் குணமாக்குகின்றார். உடல் ஊனத்தை மட்டுமல்ல, தாழ்வு மனப்பான்மை என்னும் மன ஊனத்தையும் குணப்படுத்துகிறார் இயேசு. இயேசுவைப் போல உடல் ஊனமுற்றவர்களை மனித நேயத்தோடும், மதிப்போடும் நடத்த அழைக்கப்படுகின்றோம். இதுவே முழு மனிதனாக வாழ நம்மை அழைத்து செல்லும்.

**முதல் வாசக முன்னுரை**

இன்றைய முதல் வாசகத்தில் கூறுவது போல மெசியாவின் காலத்தில் பார்வையற்றோர் பார்ப்பர், காது கேளாதவர் கேட்பர் என்ற எசாயா இறைவாக்கினர் வார்த்தைக்கு தாமே வரவிருக்கும் மெசியா என்பதற்கு சான்று பகர்ந்தார். உடல் ஊனத்தை விட உள்ள ஊனத்தால் தாழ்வு மனப்பான்மையால் சமுதாயத் தீமையால் இயலாமை, இல்லாமை அகற்றி புதிய மனிதரையும், சமுதாயத்தையும் உருவாக்க இயேசு விரும்பினார். இயேசுவின் விருப்பத்தை செயல்படுத்த தேவையான இறையருள் வேண்டி இவ்வாசகத்திற்கு செவிமடுப்போம்.

## இரண்டாம் வாசக முன்னுரை

பணக்காரர்களும், உயர்ந்தவர்களும் வரும்போது அவர்களை கண்ணியமாக நடத்துபவர்கள், ஏழைகளும் எளியவர்களும் வரும்போது அவர்களை ஏளனமாக நடத்தவது குறித்து யாக்கோபு வருத்தப்படுகிறார். பணக்காரர்களுக்கும் உயர்ந்த சாதியினருக்கும் தனிக் கவனம் செலுத்தும் இந்த சமுதாயம் மிகச் சிறப்பாக திருஅவை ஏழைகளையும் தாழ்த்தப்பட்டவர்களையும் சில நேரங்களில் கண்டு கொள்ளாமல் விட்டுவிடுகிறது. பணத்தின் சார்பாக, சாதியின் சார்பாக திருஅவை செயல்படும்வரை அது கிறிஸ்துவுக்குச் சாட்சியாக இருக்க முடியாது, மனிதர்களையும் முழு மனித வாழ்வுக்கு அழைத்துச் செல்ல முடியாது என்ற உண்மையை உணர்ந்தவர்களாக இவ்வாசகத்திற்கு செவிமடுப்போம்.

## மன்றாட்டுக்கள்

1 அன்பின் இறைவா, எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், இருபால் துறவியர் மற்றும் பொதுநிலையினர் அனைவரும் ஏழைகள், அநாதைகள், கைம்பெண்கள், கைவிடப்பட்டோர் ஆகியோர் மீது பரிவும், இரக்கமும் கொண்டு அவர்களது வாழ்க்கை தரம் உயர தங்களையே முழுமையாக அர்ப்பணித்து வாழக் கூடிய மன உறுதியை தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

2 அன்பின் இறைவா, உடல் உறுப்புகளை இழந்துள்ள, உடல் உறுப்புகள் குறைபாடு உடையோர் ஒவ்வொருவரும் நம்பிக்கையை ஒருபோதும் இழந்து விடாமல் மன உறுதியோடும், நம்பிக்கையோடும் வாழவும் அவர்கள் ஒவ்வொருவரும் பிறரால் மனித நேயத்தோடு வழிநடத்தப்படவும் உமது அருளை தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

3 அன்பின் இறைவா, நாங்கள் ஒவ்வொருவரும் பிறரை எங்களைவிட குறைந்தவர்கள் என்று தவறாக தீர்ப்பிடாமல் ஏழை, பணக்காரன், உயர்ந்தவன், தாழ்ந்தவன் என்ற பாகுபாடு பார்க்காமல் எல்லாரையும் மனித நேயத்தோடும் மனித மாண்போடும் வழிநடத்த அருள் தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

4 அன்பின் இறைவா நாங்கள் எந்த நிலையில் இருந்தாலும் எங்களை அன்பு செய்து, பாதுகாத்து வருகின்றீர் என்ற உண்மையை உணர்ந்து ஒருபோதும் மன தளர்ச்சி அடையாமல் நம்பிக்கையோடும், மகிழ்ச்சியோடும் வாழ அருள் தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

5 அன்பின் இறைவா, உடல் உள்ள நோய்களால் பாதிக்கப்பட்டு நம்பிக்கை இழந்து இருக்கும் ஒவ்வொருவருக்கும் உமது தெய்வீக பிரசன்னம் நலமும் வளமும் தருகின்ற பிரசன்னமாகவும் மேலும் அவர்களை வாழ்வின் முழுமைக்கு அழைத்து செல்லும் பிரசன்னமாக அமைய அருள் தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.





## பொதுக்காலம் 24-ம் ஞாயிறு (15.09.2024)

**எசா 50:5-9 யாக் 2:14-18 மாற் 8:27-35**

## முன்னுரை

மனிதர்களாகிய நாம் ஒவ்வொருவருமே நம்மோடு கூடவாழக்கூடிய மனிதர்களைப் பற்றியும் இந்த உலகத்தைப் பற்றியும் நிறைய எதிர்பார்ப்புக்களை வைத்துள்ளோம். இந்த எதிர்பார்ப்புக்களை மற்றவர் நிறைவேற்றும்வரை அல்லது நமது எதிர்பார்ப்புக்களுக்கு ஏற்ப அனைத்தும் நடக்கும்வரை மகிழ்ச்சியாய் இருக்கிறோம். ஆனால் இந்த எதிர்பார்ப்புகளுக்கு எதிராக ஏதேனும் நிகழ்கின்றபோது ஏமாற்றம், கோபம், விரக்தி ஏற்படுகின்றது. இன்றைய நற்செய்தி அப்படிப்பட்ட நிகழ்வைதான் நமக்கு சுட்டிக்காட்டுகிறது. உரோமை அடிமைத்தனத்தை தூக்கி எறிந்துவிட்டு இஸ்ரயேல் அரசராக இயேசு இருப்பார் என்று பேதுரு எதிர்பார்த்தார். ஆனால் இயேசுவின் பதில் பேதுருவின் இந்த எதிர்பார்ப்பைத் தவிடுபொடியாக்குகின்றன. ஏமாந்துபோன பேதுரு இயேசுவைத் தனியே அழைத்து கடிந்து கொள்கிறார். ஆனால் இயேசுவோ இப்படிப்பட்ட தவறான எதிர்பார்ப்புக்காக பேதுருவைக் கடிந்து கொள்கிறார்.

பிறர் நமது எதிர்பார்ப்புக்கு ஏற்ப நடக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பது தவறு. பிறரது எதிர்பார்ப்புக்கேற்ப நம்மையே மாற்றிக் கொண்டு நமது சொந்த இயல்பை அழித்துக் கொள்வதும் தவறு. மாறாக கடவுளின் எதிர்பார்ப்பிற்கேற்ப நமது வாழ்க்கையை அமைத்துக் கொள்வதே சிறந்தது. எனவே இறை விருப்பத்தை அறிந்து வாழக் கூடிய இறை ஞானத்தை வேண்டி இத்திருப்பலியில் பங்கு பெறுவோம்.

## முதல் வாசக முன்னுரை

கிறிஸ்துவின் எதிர்கால நிகழ்வுகளைப் பற்றி இன்றைய முதல் வாசகத்தில் இறைவாக்கினர் எசாயா கூறுகிறார். கிறிஸ்து கடவுளின் உண்மையான ஊழியன் என்றும், கிறிஸ்துவிடம் கடவுளின் ஆவி உள்ளது என்றும் அவரே ஆண்டவரின் உண்மையான கீழ்படிதலுள்ள ஊழியன் மெசியா என்றும் கூறுகின்றார். ஆண்டவரின் பணியை செய்வதற்காக மெசியா துன்பங்களையும் அவமானச் சிலுவை சாவையும் ஏற்க போகிறார் என்று இறைவாக்கினர் முன்னறிவிக்கிறார்.

## இரண்டாம் வாசக முன்னுரை

நமது விசுவாசமும், செயல்களும் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும் என்று புனித யாக்கோபு நமக்கு அறிவுரை கூறுகிறார். உயிர் இல்லாத உடல் போல, செயல்களில்லாத விசுவாசமும் செத்ததே என்கிறார். தீர்ப்பு நாளின் போது நம் நற்செயல்களைப் பார்த்துதான் இறைவன் தீர்ப்பு அளிப்பார். நமது விசுவாசமும் நற்செயல்களும் இணைந்திருந்தால் கிறிஸ்தவ வாழ்வு வளம் பெறும். விசுவாசமே வாழ்க்கையாகவும், வாழ்க்கையே விசுவாசமாகவும் மாற அருள் வேண்டுவோம்.